# யாழ்நாதம்

இதழ் 10

2004



'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்
கொழும்பு' இன் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பவளவிழா காட்சிகள்



நடுத்தோட்ட இராஜவரோதயப்
பிள்ளையார் கோயிலில்
திரு. திருமதி கயிலாசபிள்ளை
கோயில் குருக்களிடம் இருந்து
காளாஞ்சி பெறுகின்றனர்.

திரு. கயிலாசபிள்ளை அவர்கள்
மங்கள விளக்கு ஏற்றுகின்றார்.





அவையில் இருந்த
ஒரு பகுதியினர்

திரு. திருமதி கயிலாசபிள்ளை
கல்லூரி அதிபருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி அபிராமி
கயிலாசபிள்ளை செல்வி
ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரனுக்கு
பொன்விருது வழங்குகின்றார்.



செல்வி சற்சொரூபவதி
நாதனுக்கு இலங்கை தமிழ்
ஊடகவியலாளர் ஒன்றியம்
12.10.2003 இல் தேசிய விருது
வழங்கி கௌரவித்த
வைபவத்தில் அமைச்சர்
தி. மகேஸ்வரன் பொன்னாடை
போர்த்தி விருது வழங்கும் காட்சி.

## யாழ் நாதம் இதழ் 9 வெளியீடும், கலை நிகழ்ச்சியும்

(41ஆம் பக்கம் பார்க்கவும்)



பிரதம அதிதி சட்டத்தரணி
திரு. வே. தேவசேனாதிபதிக்கு
இதழ் ஆசிரியை
திருமதி சிவகாமி அம்பலவாணர்
முதல் பிரதியை வழங்குகின்றார்.




செல்வி வேல்விழி
சிவசுப்பிரமணியத்தின்
இசை விருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச மருத்துவ முகாமின் போது

(29ஆம் பக்கம் பார்க்கவும்)



வைத்திய கலாநிதி நந்தினி மோகன் சுப்பிரமணியத்தை சங்கப் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பழக்கூடை வழங்கி கௌரவிக்கின்றார்.



காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பயனுள்ள படமூல விளக்க மருத்துவ குறிப்புக்கள்.

## சேவையில் ஈடுபட்டிருக்கும்



வைத்திய கலாநிதி திருமதி நந்தினி மோகன் சுப்பிரமணியம், வைத்திய கலாநிதி திருமதி சசிகலா சுரேஷ்.



வைத்திய கலாநிதி செல்வி தர்மினி குமாரசுவாமி வைத்திய கலாநிதி திருமதி பாலினி பொன்கோவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம்

'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு' இன் வெளியீடு

இதழ் 10 2004

பொருளடக்கம்


| | |
|---|---|
| 2 சமர்ப்பணம் | 29 பெண்களுக்கான இலவச மருத்துவ முகாம் |
| 3 சங்கத்தின் வளர்ச்சிப் பாதையில் | 34 Ranawara Herbal - Cassia Auriculata |
| 5 யா இ ம க – ப மா ச உபதலைவியின் பாராட்டுரை | 35 JHLC OGA, UK - Secretary's Report |
| 6 வ கீ பி பா ப மா சம் செயலாளரின் வாழ்த்துரை | 37 யாழ். இந்து மகளிர் கல்லூரியின் 60 ஆண்டு கல்விப்பணி |
| 7 அறை அறை அறை | 40 எமது ஆசிரியர் திருமதி. புஷ்பமணி சுப்பிரமணியம் அவர்கள் |
| 11 பாரதியின் சக்தி – ஒரு நோக்கு | 41 யாழ் நாதம் இதழ் 9 வெளியீடும் கலை நிகழ்ச்சியும் |
| 17 விளக்கு | 43 Hospital Pharmacy |
| 21 தர்மம் வெல்லும் | 49 யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை பிறந்த கதை |
| 23 ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோயில் | 51 Some amazing facts |
| 27 கனியமுதன் கந்தன் | 53 யாஇமக – பமாச, கொழும்பு – பத்தாம் ஆண்டு அறிக்கை |


"நான் இங்கு வசிக்கிறேன். இவ்வீடம் அழகாக இருக்கும்"

**"It ought to be beautiful, I live here"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு உருவாவதற்கு ஊக்கமுடன் உழைத்தவர்களுள் ஒருவர் அண்மையில் அமரராகிவிட்ட எங்கள் கல்லூரிப் பழைய ஆசிரியை திருமதி புஷ்பமணி சுப்பிரமணியம் ஆவார். மணிவிழாக் கண்ட எங்கள் கல்லூரிக்கும் திருமதி புஷ்பமணி சுப்பிரமணியத்திற்கும் சமர்ப்பணமாக இவ் விதழைப் பிரசுரிக்கின் றோம்.

எங்கள் கல்லூரி 60ஆம் ஆண்டு நிறைவைக் கோலாகலமாகக் கொண்டாடிய போது எங்கள் சங்கம் 10ஆம் ஆண்டு நிறைவை ஆனந்தமாகக் கொண் டாடியது.

கடந்த 60 ஆண்டுகளாக எங்கள் கல்லூரி ஆற்றிய சேவைகள் அளப்பரியன. பல உயரிய பெண்களை இக் கல்லூரி உருவாக்கி உள்ளது. இப் பெண் கள் கல்வித்துறை, தொழில் நுட்பத்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற் றில் சிறந்து விளங்குகின்றார்கள். அத்துடன் அவர்கள் அடக்கமான குடும் பப் பெண்களாகவும், அரவணைக்கும் அன்னையராகவும், தைரியமும் தன் னம்பிக்கையும் கொண்டவர்களாகவும் இங்கும் பிறநாடுகளிலும் கடமையாற் றுகின்றார்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்த வருடம் இரண்டாவது முறையாக எங்கள் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வை கொழும்பில் மேடையேற்றச் சந்தர்ப் பம் கிடைத்தது எங்கள் சங்கத்திற்குப் பெரு மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆளுமை மிக்க கல்லூரி அதிபர், ஆற்றல் மிக்க ஆசிரியைகள், கலைத் திறன் மிக்க மாணவிகள் எல்லோரும் என்றும் போல் இம்முறையும் இ ரசிகப்பெருமக்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளனர்.

இந்த மாணவிகள் வளர்ந்து தமது இளைய சந்ததியினருக்கும் எம் கல்லூ ரிக்கும் உதவ கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் அருள் பாலிப்பாராக.

இவ் விதழைச் சீர் செய்து தந்த யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் எங்கள் சங்கத்தின் நன் றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

61/2, Abdul Gaffoor Mawatha
Colombo 3

திருமதி சிவகாமி அம்பலவாணர்
மலர் ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்தின் வளர்ச்சிப் பாதையில்.....

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளையினர் தமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஒரு கலை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தனர். தற்போது கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவிகளும் எதிர்காலத்தில் கல்லூரியில் பற்றுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது அவர்களது பேரவாவாகும். அதன் வெளிப்பாடாக கல்லூரி மாணவிகளை கொழும்பிற்கு அழைத்து அவர்களது கலை நிகழ்ச்சியை அன்றைய தினம் நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாகப் புகுத்தி அனைவரது பாராட்டையும் பெறுவதற்கான வாய்ப்பினை அளித்தனர்.

மாணவர்களின் போக்குவரத்திற்காக குறைந்த கட்டணத்தில் வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தினர் தமது பஸ்ஸினைத் தந்து உதவினர்.

போக்குவரத்துச் செலவு, உணவு, தங்குமிடவசதி, பக்கவாத்தியம், கலைஞர், ஒப்பனையாளர் ஆகிய அனைவருக்குமான செலவினைச் சங்கமே பொறுப்பேற்றது. பம்பலப்பிட்டியில் சாலிமன் வீதியிலும் டிக்மன் வீதியிலும் தங்குவதற்கு ஒழுங்கினைச் செய்திருந்தனர். சங்க உறுப்பினர்கள் குறிப்பாக தலைவி, செயலாளர், பொருளாளர் ஆகியோர் ஒருங்கிணைந்து சிரமப்பட்டு அனைத்து வசதிகளையும் செய்து தந்தனர். மாணவிக்ள் மிகவும் சந்தோஷமாக நிகழ்வில் பங்குபற்றினர்.

டாக்டர் இராமஜெயம் பிரதமவிருந்தினராக வருகை தந்து விழாவினைப் பெருமைப்படுத்தினார்.

கல்லூரியின் பழைய மாணவியான திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் உமாராணி குமாரசுவாமி அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து நிகழ்வினைச் சிறப்பித்தார். அதுமாத்திரமன்றி கல்லூரியின் பரிசு திதியத்திற்கு 50,000/- ரூபாவிற்கான காசோலையையும் தந்து கௌரவித்தார்.

புஷ்பாஞ்சலி, நடனம், நாடகம், நாட்டிய நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நாட்டிய நாடகம் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்ததாக அமைந்தது. அதன் பின் கொழும்பில் இருந்து அந்த நாட்டிய நாடகத்தை மீண்டும் மேடை ஏற்றும்படி பலரும் வேண்டுதல் விடுத்தனர். அந்தப் பெருமையெல்லாம் கொழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புச் சங்கத்தினரையே சாரும்.

சங்கத்தின் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் கல்லூரியின் தேவைக்காக 65,000/- ரூபா பெறுமதியான ஓகன் வாத்தியக் கருவியைத் தனது சொந்தப் பணத்தில் வாங்கி கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார். இவர் கல்லூரிக்கு வருகை தந்தபோது கல்லூரி ஆலயத்தின் தள வேலைக்கு என நூறாயிரம் (100,000/-) ரூபா அன்பளிப்புச் செய்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர் அவர்களும் மிகவும் முன்னின்று கலை நிகழ்வில் தனது பங்களிப்பினை பூரணமாகச் செய்தார். அவரும் கல்லூரிக்கு வருகை தந்த பொழுது பென்ரியம்-IV கணனி ஒன்றினை அன்பளிப்புச் செய்தார்.

கொழும்புச் சங்கம் விஞ்ஞான கூடத்திற்கு பொருள்களை தந்துதவியது.

சங்கத்தின் தலைவி செல்வி. சற்சொரூபவதி நாதன் அவர்கள் சிறந்த ஊடகவியலாளருக்கான விருதினையும் அக்கால கட்டத்தில் பெற்றமை கல்லூரிக்கு பெருமையையும் எமக்கு மகிழ்ச்சியையும் அளித்தது.

நிகழ்ச்சியில் பங்கு பற்றிய மாணவிகளுக்கு கொழும்பு நகரத்தைச் சுற்றிக் காட்டியதுமல்லாமல் மிருகக்காட்சிச் சாலைக்கும் அழைத்துச் சென்று உற்சாகப் படுத்தினர்.

மொத்தத்தில் அதிபர், ஆசிரியர், பெற்றோர், மாணவிகள், அடங்கிய இந்தப் பிரயாணமும் நிகழ்வும் கல்லூரியை மேலும் வளர்த்தெடுப்பதற்கு உற்சாகப் படுத்திய ஒன்றாக அமைந்தது. சங்கத்தின் பணி தொடர வேண்டும். அவர்கள் நல்லபடியாக சங்கத்தினை வளர்த்தெடுக்க வேண்டும் என்று ஆசி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சங்க ஸ்தாபகரில் ஒருவரான திருமதி புஷ்பமணி சுப்பிரமணியம் அவர்களின் மறைவு வருந்தத்தக்கதொன்றாகும். அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன். அவரது ஆசி என்றும் சங்கத்திற்கு நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

கல்லூரிச் சமூகத்தினரை அழைத்து கௌரவித்தமைக்கு கல்லூரியின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி சரஸ்வதி ஜெயராஜா
அதிபர்
யாழ். இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# யாழ்/ இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க உபதலைவியின் பாராட்டுரை

யாழ்/ இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழாக் கோலாகலங்கள் 1993ம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், இலங்கை மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து கனடா, அவுஸ்திரேலியா நாடுகளிலும், கொழும்பிலும் வாசம் செய்யும் கல்லூரியின் பழைய மாணவிகள் தாம் வாழ்கின்ற இடங்களில் ஒருங்கிணைந்து பழைய மாணவர் சங்க கிளைச் சங்கங்களை அமைத்துள்ளனர் என்ற மகிழ்வான செய்தியைக் கேட்டு கல்லூரிச் சமூகமே மிகவும் பெருமிதம் கொண்டது.

கொழும்புக் கிளை 'யாழ் நாதம்' என்ற நாமத்துடன் ஒரு வருடாந்த சஞ்சிகையையும் தமது பணிகளுள் ஒன்றாகக் கருதி வெளியிட அவாப் பெற்றிருந்தது. தமது முதல் வெளியீட்டுக்கு அன்றைய பழைய மாணவர் சங்கத் தலைவி என்ற முறையில் என்னிடம் ஓர் ஆசிச் செய்தி கோரியிருந்தது. தாய்ச் சங்கத்தின் சார்பில் சேய்ச் சங்கமாகிய கொழும்புக் கிளைக்கு நான் ஓர் கோரிக்கை விடுத்திருந்தேன்.

தொடரும் கொடிய யுத்தத்தினால் நலிவுற்றிருக்கும் யாழ் மண்ணில் எமது கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிதி வசதிகளை யாழ் மண்ணில் பெற்றுக் கொள்ள முடியாதென்றும், பொருளாதார வசதிகளுடனும், உயர்மட்டத் தொடர்புகளுடனும் கொழும்பில் வாழும் எம் பழைய மாணவர்கள் எம் கல்லூரி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு கல்லூரிக்குத் தேவையான நிதி வசதிகளையும் உபகரண வசதிகளையும் வழங்கி உதவ வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தேன். தாய்ச் சங்கத்தினரதும் கல்லூரியினதும் எதிர்பார்ப்புக்கு மேலாக கடந்த பத்து ஆண்டுகளில் கொழும்புச் சங்கம் எமது கல்லூரிக்கு நிறைந்த உதவிகளை வாரி வழங்கியிருக்கின்றது. தமது சேயின் கொடைவளம் கண்டு தாய்ச் சங்கம் பூரிக்கின்றது.

நன்மை பயக்கும் கைங்கரியங்களில் முன்னின்று உழைத்த கொழும்புக் கிளை அங்கத்தவர்களுக்கு இச் சஞ்சிகை வாயிலாக எம் உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள், நன்றிகள். உங்கள் பணி மேலும் சிறக்க கல்லூரியின் காவல் தெய்வமாம் நடுத்தோட்டப் பிள்ளையார் அருள் பாலிப்பாராக

அன்புடன்
திலகவதி யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட — கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனம்

# NORTH-EAST REGION SCHOOLS PAST PUPILS FEDERATION

வட — கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனம் ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் உருண்டு ஓடிவிட்டன. இந்த எட்டு ஆண்டுகளில் எம்மோடு இணைந்து பணியாற்றிய பழைய மாணவர் சங்கங்கள் பல உள்ளன. அந்த சங்கங்களில் பிரதானமான ஒரு சங்கம் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் ஆகும்.

மேற்படி சங்கம் தனது பத்து ஆண்டு நிறைவை சென்ற வருடம் கொண்டாடியது பலருக்கு நினைவில் இருக்கும். இந்த பத்து ஆண்டுகளில் இச்சங்கம் தனது கல்லூரித் தாய்க்கு பல மிகவும் முக்கியமான பொருட்களை கொள்வனவு செய்து அனுப்பி வந்துள்ளது.

தேவை அறிந்து பொருத்தமான காலத்தில் உதவும் இந்த பண்பு இச்சங்க உறுப்பினர்கள் சம்மேளன பணிகளில் ஈடுபடும் போதும் கடைப்பிடிப்பதை காண முடிகிறது. யாழ்நாதம் 10ஆம் இதழுக்கு எமது சம்மேளனத்தின் சார்பில் நல் வாழ்த்துக்களை இத்தருணத்தில் தெரிவிக்கின்றேன். இந்து மகளிர் கல்லூரிக்கு இச்சங்கம் தொடர்ந்தும் சிறப்பான முறையில் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி வி. அம்பலவாணர்
கௌரவ செயலாளர்
31.03.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறை அறை அறை

ஐங்கரனுடைய அருட்கடாச்சம் பெற்ற பயனால் ஔவையார் இன்றும் வாழ்ந்து வரும் ஒரு பெண்பாற் புலவர் ஆவர். இவர் இயற்றிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி போன்ற நீதி நூல்கள் மக்கள் நல்வழி வாழ வழிகாட்டுவனவாக இன்றும் திகழ்கின்றன. இனிவரும் சமுதாயத்திற்கும் நல்வழி புகட்டிக் கொண்டேயிருக்கும் நீதி நூல்களால் ஔவையார் சாகாவரம் பெற்று வாழ்ந்து வருகிறார்.

இத்துணைச் சிறப்புப் பொருந்திய ஔவையார் நெடுந்தூரம் நடந்து வருகிறார். வாகன வசதிகள் இல்லாத காலம் மக்கள் ஊரூராக கால் நடையாகவே கடுகி நடந்த காலத்தில் ஔவை மூதாட்டியும் நீண்ட நெடுந்தூரம் நடந்து வந்த களைப்பு. மாலை மறைந்து இருள் சூழும் நேரம். இருட்டில் இனி பிரயாணம் செய்ய முடியாது. அவரவர் வசதிக்கேற்ப எங்காவது தங்கிவிடவேண்டும். இதற்கென்றே பொது இடங்களில் சத்திரங்கள் பல கட்டப் பட்டிருக்கும். எனவே நம் மூதாட்டியும் கண்முன்னே தென்பட்ட பெரியதொரு சத்திரவாயிலிலே இளைப்பாற அமர்ந்து கொண்டார். அந்தப் பெரிய சத்திரத்தில் வேறு ஒரு ஈ காக்கையைக் கூடக் காணவில்லை அவ் வழியால் போகும் பாதசாரிகளும் அவளை அதிசயமாகப் பார்த்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக அவ்விடத்தை விட்டகன்று செல்கிறார்களே தவிர ஒருவராவது அச்சத்திரத்தில் தங்கி இளைப்பாறிச் செல்ல முற்படவில்லை. ஏதோ ஒருவித அச்சத்துடன் ஓடுவதாகவே ஔவைக்குத் தென்பட்டது.

ஔவைப் பிராட்டியைப் போன்றே வான் வெளியில் உலாவிய ஞாயிறும் ஓய்வு பெறக் கருதி நீருக்குள்ளே தன்னை மறைத்துக் கொள்ள ஆரம்பித்தான். அவ்வூர் மக்களோ மூதாட்டியை ஏதோ ஒரு விசித்திரப் பிறவியைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு ஓடி ஒளிந்தார்கள். நம் ஔவைக்கு ஒரே ஆச்சரியம். மண்டபத்தைச் சுற்றித் தன் கண்களைச் சுழலவிட்டாள். அற்புதமான மண்டபம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. ஊர் எல்லையில் இருப்பதனாலா இதனைப் பராமரிக்க மக்களுக்கு முடியவில்லை. அவளோடு நின்று கதைக்கக்கூடப் பயந்து ஓடி ஒளிகிறார்களே ஏன்? ஔவைக்கும் எழுந்து ஊருக்குள் போக உடற் களைப்பு விடவில்லை. கை கால்களை நீட்டிக்கொண்டு சேலைத்தலைப்பை விரித்து விட்டு அதன்மேல் படுத்துக் கொண்டாள். களைப்பு நீங்க பசி மேலோங்கியது. எழுந்து அருகிலுள்ள நீர் நிலை தன்னில் தாகசாந்தி செய்து கொண்டாள்.

முகம் கை கால்களைக் கழுவிக்கொண்டு தன் குலதெய்வமாகிய பிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையாரைத் துதித்து சில பாடல்களைப் பாடிவிட்டுப் படுத்தாள். சிறிது கண் அயர்ந்திருப்பாள் திடீரென ஒரு கூக்குரல். பயங்கர ஒலி. ஔவை திடுக்கிட்டு விழித்து எழுந்தாள். மண்டபத்திற்குள்ளே யாரோ நடமாடுவது போல் தெரிந்தது. ஒரே கும்மிருட்டு. "யாரது?" பதிலில்லை. சிறிது நேரஞ் செல்ல ஒரு பெண்ணின் அழுகையொலி கேட்டது. ஔவைக்கு இரக்கம் பிறந்தது. "யாரம்மா நீ? எங்கே இருக்கிறாய்?" மௌனம். ஔவையார் ஒருவேளை தனது மனப் பிரமையோ என எண்ணினார். திரும்பப் படுத்தார். "போய்விடு போய்விடு இங்கே நிற்காதே" என அதட்டலோடு கூடிய குரல் கேட்டது. ஔவையார் எழுந்து உட்கார்ந்தார். "போவதா? எங்கே போவது? இந்த இருட்டில் நான் போகமுடியாது" என்றார். "போகாவிட்டால் உன்னை அறைந்து விடுவேன்" என்றது குரல். ஔவையார் கண்களை மூடிக்கொண்டு பிள்ளையாரைத் தியானித்தார்.

"அவ்வூர் இராஜகுமாரி அயலூரிலுள்ள அழகிய இராஜகுமாரன் வீதி வழியே போவதைப் பார்த்து அவன்மேல் ஆசைகொண்டு அவனை இரவு நேரம் இந்தச் சத்திரத்துக்கு வந்தால் கூடிக் களிக்கலாம் என ஒரு கடிதம் எழுதிக் கொடுத்த வேளை, அந்த இராஜகுமாரனுக்கு கல்வியறிவு இல்லாத காரணத்தினால் ஒரு காமுகனிடம் அதில் எழுதியிருப்பதை வாசித்துச் சொல்லும்படி கேட்டபொழுது, அவனும் அதிலுள்ள செய்தியை அறிந்து கொண்டு இராஜகுமாரனை நோக்கி நீ இவ்விடத்திலிருந்தால் அரசன் உன்னைச் சிரச்சேதம் செய்வார். அதனால் ஓடிப் போய்விடு என்று எழுதியிருப்பதாகக் கூற, அவனும் அவ்விடம் விட்டகன்றான். இந்தக் காமுகன் இராஜகுமாரனைப் போல் வேடமிட்டு அவ்விடம் சென்று இராஜகுமாரியோடு கூடிக்களித்தான். இதனைத் தெரிந்து கொண்ட இராஜகுமாரி அவ்விடத்திலேயே பிராணத் தியாகம் செய்து கொண்டு பிசாசாக மாறி சத்திரத்துக்கு வருவோரை தொந்தரவு செய்கிறாள்" என்பதை இறைவனருளால் தெரிந்து கொண்ட ஔவை "என்னையா நீ அறையப் போகிறாய்" எனக்கேட்டு

"வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதானைப் – பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று"

[பொருள் – வெண்பாவை இருதரம் சொல்லுமளவில் அதனைக் கல்லாதவனையும், வெண்மையாகிய ஓலையைக் கண்பார்க்கக் கையினால் எழுதாதவனையும் பெண்பாவி பெற்றாள். பிறர் பார்த்துச் சிரிக்கும்படி பெற்றாள். அப்படியானவனைப் போய் நீ அறை, அறை, அறை.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மூன்று தரம் அறை எனக் கூறியவுடன் பிசாசு மறைந்து விட்டது. ஔவை சிறிது படுத்துக் கண்ணயர இரண்டாம் ஜாமம் வந்தது. பிசாசும் வந்து அவளை வெருட்டியது. ஔவையார் அஞ்சவில்லை. தொடர்ந்து பாடினார்.

"கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கனி போல்
வருந்தினர்க் கொன் றீயாதான் வாழ்க்கை – அரும்பகலே
இச்சித் திருந்த பொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று"

[கருங்குளவி மொய்த்த சூரைப் புதரிலுள்ள ஈச்சமரத்தின் கனிபோல துன்பமடைந்தார்க்கு ஒரு பொருளையும் கொடாதவனது செல்வத்தையும், விரும்பியிருந்த பிறபொருள்களையும் அன்றைய பகலிலேயே தாயாதிகள் கவர்ந்து கொள்வார்கள். ஆதலால் அந்த உலோபியைப் போய் நீ அறை அறை அறை]
என்று கூறவும் பிசாசு மறைந்து பின் மூன்றாம் ஜாமம் வந்து ஔவையை அறையப் போவதாகத் தொந்தரவு செய்தது. அதற்கும் ஔவையார் பயப்படாது

"வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தான முளதாற் றயையுளதால் – ஆன பொழு
தெய்த்தோ மிளைத்தோமென் றேமாந் திருப்போரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று"

[மேகமுண்டு மழையுண்டு, நிலவுலகத்தில் நிலம் உண்டு. நீர் நிலையும் உண்டு. இப்படியிருந்தும் இளைத்துவிட்டோம், மெலிந்து விட்டோம் என்று சோம்பேறியாயிருப்பவர்களை நீ போய் அறை, அறை, அறை.]

என்று பாட பிசாசு போய் நான்காம் ஜாமமும் வந்தது. ஔவையார் தொடர்ந்தார்.

"எண்ணா யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்றாக் கிடையேபோல் – பெண்ணாவாய்
பொற்றொடி மாதர் புணர்முலைமேற் சாராரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று"

[பெண்ணானவளே, எண்ணாயிரம் வருஷம் நீரிலே தங்கியிருந்தாலும் உள்ளே நீரைக் கொள்ளாத சடை போலவே பொன் வளையலையணிந்த குலமாதரது நெருங்கிய தனங்கள் மீது பொருந்தாது, விலைமாதரை விரும்புகின்ற காமுகனைப் போய் நீ அறை, அறை, அறை.]

என்று நான்காவது ஜாமத்திற்கும் பாடலைப் பாட பிசாசு ஔவையாரை வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கியது. அதற்கு ஔவையார் "இனி இங்கு வந்து தங்குவோரைத் துன்புறுத்தாதே. அடுத்த பிறவியை எடுத்து நீ விரும்பியவரையே அடைந்து இன்புற்று வாழ்வாயாக" என்று வாழ்த்தி பிசாசைப் போகவிட்டார்.

கிழக்கு வானிலே மெல்ல மெல்லச் சூரியனும் உதிக்கத் தொடங்கினான். ஔவையார் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு இறை தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவ்வழியால் வந்த மக்கள் ஆவலுடன் ஓடி வந்து சத்திரத்தைப் பார்வையிட்டனர். ஔவையார் உயிருடன் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். தேடற்கரிய நெல்லிக்கனியை தான் உண்ணாது தமிழ் மூதாட்டி நீண்ட நெடுங்காலம் வாழ வேண்டுமென்று அளித்தவர் அதிகமான். அத்துணைப் பெருமை வாய்ந்த ஔவையார் மக்களைப் பார்த்து "பிசாசு போய் விட்டது. இனிமேல் நீங்கள் பயமின்றி மண்டபத்தில் தங்கலாம்."

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். கல்வி கற்காத ஒருவனால் வந்த துன்பமே இது. ஆனபடியால் நீங்கள் எண்ணையும், எழுத்தையும் கற்று சிறப்புற்று வாழவேண்டும்" என்று கூறி அவ்விடம் விட்டு அகன்று தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

## மரகதா சிவலிங்கம்

**மரண அறிவித்தல் – திருமதி மகேஸ்வரி நடேசபிள்ளை**
**(இளைப்பாறிய ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி,**
**யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், 66/2, யோசப் டயஸ் மாவத்தை, கொழும்பு 15 இல் வசித்துவந்தவருமான திருமதி மகேஸ்வரி நடேசபிள்ளை 24.07.2003 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற சின்னையா, லட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், நடேசபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற முத்து, வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகளும், கந்தையா, ஆறுமுகம், சண்முகலிங்கம், காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், நடேஸ்வரன், மனோகரன், மேனகா, மகேஸ்வரன், ஜெயமனோகரி, கேதீஸ்வரன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், சுகன்யா, இந்துமதி முனீஸ்வரன், வியாசன், செல்வினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தக்ஷாமினி, யோடனா, அம்சாடன், துளசி, நிலமகள், மகிந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். (பிரசுரம்: வீரகேசரி வெள்ளிக்கிழமை 25 ஜுலை 2003 பக்கம் 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் சக்தி – ஒரு நோக்கு

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த ஒரு கவிஞனாகவும். தேசியப் போராட்டத் திலும். சமூக விடுதலையிலும் முக்கிய பங்கு வகித்துவந்த பாரதி தன் வாழ் நாளில் தான் ஈட்டிய வெற்றிகளுக்கு உறுதுணையாக இருந்த பராசக்தியைத் தன்னுடன் இணைத்தும். தனக்கு வேறாகவும் காணுகின்ற தன் மையுடையவராயிருந்தார். பாரதி சக்தியை தத்துவக் கண்ணோட்டத்துடன் பார்த் தவர்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராயினும் பாரதி உபநிடத காலத்திற்கு முற் பட்ட வேதசங்கிதைகளை நன்கு அறிந்தவர். அவற்றின் பாடல்கள் சிலவற்றை மொழிபெயர்த்தவருமாவார். இயற்கையைத் தெய்வமாக வழிபட்டுவந்த வேதகால மக்கள் ஈற்றில் "ஒரு பொருளாம் உன்னைக் கவிஞர் பல பெயரிட்டழைக்கின் றார்" என்றனர். அதேபோல பாரதியும் தான் கண்ட உயர் சக்தியை

"இயற்கையென்றுரைப்பார் – சிலர்
இணங்கும் ஐம்பூதங்கள் என்றுரைப்பார்"

என்று பாடினார். பாரதி எதிர்காலத்தையும் தீர்க்க தரிசனமாக உணர்ந்து போலும் இன்றைய நூற்றாண்டில் விஞ்ஞானிகள் கூறும் செயற்கை சக்தியும் அந்த "உயர் சக்தி" தானென்றார்.

"செயற்கையின் சக்தியென்பார் – உயிர்த்
தீயென்பார் அறிவென்பார் ஈசனென்பார்
வியப்புறுதாய் நினக்கே – இங்கு
வேள்வி செய்திடும் எங்கள் ஓம்"

என்றும் கூறுவார். ஓம் என்னும் பிரணவப் பொருளாயிருப்பவளும் உள்ளே அனைத்திலும் மேவியிருப்பவளும் சக்தி என்பது பாரதியின் உறுதியான நம்பிக் கை.

சக்தியை நம்பிக்கையுடன் பல கோணங்களிலே நின்றும் பார்க்கின்றார். பராசக்தி, முத்துமாரி. காளி. சரஸ்வதி. கலைமகள் லக்சுமி, என தெய்வீகத் தன்மையூட்டி மகா சக்தியாக மட்டுமன்றி, கண்ணம்மா என்ற பெயரில் குழந்தையாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியாகவும் உறவு முறைகளிலும் காணத் தவறவில்லை. நாயன்மார்களும் உறவு முறைகளிலே இறைவனை வழிபட்டவர்களாயினும் பாரதி பராசக்தியை குழந்தையாகவும் காதலியாகவும் கொண்டு கவிதைகளை படைத்த தன்மை எல்லோர் உள்ளத்திலும் மகிழ்வை ஏற்படுத்திய உயரிய உறவுநிலை அனுபவங்களாகும்.

"சின்னஞ்சிறு கிளியே – கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே"

என பராசக்தியை சிறு குழந்தை போல கண்டு அழைத்து.

"என்னைக் கலி தீர்த்தே – உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்" என்கின்றார்.

"பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே – உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்"

"அள்ளி அணைத்திடவே – என்முன்னே
ஆடி வருந்தேனே
ஓடி வருகையிலே – கண்ணம்மா
உள்ளம் குளிருதடி
ஆடித்திரிதல் கண்டாய் உன்னைப் போய்
ஆவி தழுவுதடி" என்றும் அதே பாடலில்

"என் கண்ணின் பாவையன்றோ? – கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ" என்றும்

"சீர் பெற்று வாழ்வதற்கே உன்னைப்போல்
செல்வம் பிறிதுமுண்டோ" என்றும் அவர் பாடும் வரிகளும்

"காற்று வெளியினிடை கண்ணம்மா – நின்றன்
காதலை எண்ணிக் களிக்கிறேன்" என்று கூறிய வாசகங்களும்

உயர் தத்துவ விளக்கம் செறிந்த பாடல்களாம்.

"எந்தப் பொருளிலும் – உள்ளே நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கி யிருப்பவளே
விண்ணிற் கரியவளே அனைத்திலும்
மேவியிருப்பவளே"

என அனைத்திலும் நீக்கற நிறைந்திருக்கும் தன்மை புலப்படுத்தப்படுகிறது.

"எங்கெங்கு காணிலும் சக்தியடா
ஏழுகடல் அவள் வண்ணமடா"

என எல்லையில்லாத நீல நிறக் கடலுடன் சக்தியின் இயல்பு சுட்டிக் காட்டப் படுவது சக்தியின் எல்லையில்லாத் தன்மையை புலப் படுத்துவதாகும்.

சக்தியிடம் பல வேண்டுதல் விண்ணப்பங்களை பாரதி கையளித்துள்ளார்.

'வேதங்கள் சொன்னபடிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டும்
வேகம். கவர்ச்சி முதலிய பலவினை
மேவிவரும் சக்தியை மேவுகின்றோம்"

என பாரதி சக்தியிடம் வேண்டும் சந்தர்ப்பம் மணிவாசகர் சிவனிடம் "வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என்று வேண்டியதை நினைப்பூட்டுகிறது. புலன்களின் வேகத்தைக் கெடுத்தாண்ட உயர் சக்தியை சிவன் என மணிவாசகர் காண, அதனை உயர் சக்தி என பாரதி காணுகிறார்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

என்று சக்தியை வேண்டும் வேண்டுதல் உலக மக்கள் அனைவரும் ஒருமித்து பராசக்தியிடம் வேண்டுதல் செய்ய வேண்டிய வரிகளாம்.

நாம் பண்ணிய பாவங்கள் எல்லாம் பரிதி முன் பனிபோல சக்தியின் முன் நசிந் திடல் வேண்டும் என்றும் மற்றும் ஒரு கவிதையில் "செய்யும் வினைகள் அனைத்திலும் வெற்றி சேர்த்திட நல்லருள் செய்க" என்றும் வேண்டுகிறார்.

சக்தி என்னும் உயர் நிலைக்கு பலவாறு வரைவிலக்கணம் கூற பாரதி முற் படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துன்பமில்லா நிலையே சக்தி
தூக்கமிலாக் கண் விழிப்பே சக்தி
அன்பு கலந்த கனிவே சக்தி"

என கூறிச் செல்லும் கவிதைப் பகுதி சோம்பல் கெடுக்கும் துணிவே சக்தி என்றும் தெய்வ நினைப்பே சக்தி என்றும், படையே சக்தி என்றும் பாட்டினில் வந்த மகிழ்வே சக்தி என்றும் பல்வேறு பொருள் பொதிந்த வரிகளுடன் தொடர்ந்து செல்கிறது. எங்கெல்லாம் இனிமை நன்மை பெருமை உளதோ அந்தப் பண்புகளையே சக்தியாகக் கண்டவர் பாரதி.

"சொல்லடி சிவசக்தி – என்னைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே'

என அறிவு வல்லமை வெற்றி தரும் உயர் சக்தி தெய்வமாக சக்தியைக் காணுகிறார்.

"நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம்"

என பாரதி கூறுவதால் வரம் தரும் ஒரு சக்தியாக அம்பிகையை பாரதி கண்டதை நாம் காணுகின்றோம்.

"எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தலைகள்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம் பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்தது காண் நூறாண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு"

என பராசக்தியே படைத்தல் சக்தியாகவும் உணர்த்த முற்படுகிறார். ஓம் என்னும் பிரணவப் பொருளாகவும் காத்தல் தொழில் புரியும் உயர் சக்தியாகவும் இன்னும் சமயத் திருநூல்களில் கடவுளருக்கு கொடுத்த வரைவிலக்கணங்கள் அனைத்தையும் சக்தி மீது கண்டவர் பாரதி.

"ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சக்தியுந்தான்
அங்குமிங்கும் எங்கும் முளவாகும் – ஒன்றே
யாகினாலுலகனைத்தும் சாரும் – அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்றியோர் பொருளுமில்லை"

என்றார். தன் வாழ்வில் உயர் தத்துவமாக விளங்கும் உயர் சக்திக்கு ஒரு சமர்ப்பணக் கவிதையும் படைத்தவர் பாரதி.

'சக்தி தனக்கே கருவியாக்கு – அது
சாதனைகள் யாவினையும் கூடும்"

என்பது பாரதியின் நம்பிக்கை.

பாரதியை ஒரு அத்வைத சிந்தனையாளர் எனக் குறிப்பிடும் அறிஞரும் உள்ளனர். அத்வைத வேதாந்த நோக்கின்படி யாவும் பிரமத்தின் தோற்றம் எனக்கூற பாரதி

"யாதுமாகி நின்றாய் காளி" என்றார்.

இருந்தாலும் அத்வைத வேதாந்தம் உலகையும், வாழ்வையும் பொய் என்று கூற பிறிதொரு சந்தர்ப்பத்தில் பாரதி அப்பார்வை தொடர்பாக ஐயமும் கொண்டார்.

"பொய்யோ மெய்யோ?" என்ற கவிதைப்பகுதி மேற் கூறிய கருத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

"நிற்பதுவே, நடப்பதுவே பறப்பதுவே
நீங்களெல்லாம்
சொற்பனந்தானோ? பல
தோற்ற மயக்கங்களோ
அற்ப மாயைகளோ? – உம்முன்
ஆழ்ந்த பொருள் ளில்லையோ"

"காலமென்றே யொரு நினைவுங்
காட்சியென்றே பல நினைவுங்
கோலமும் பொய்களோ? – அங்கு
குணங்களும் பொய்களோ?"

என ஐயவினாவுடன் தொடரும் இப்பாடற் பகுதியின் இறுதியிலே

"காண்பதெல்லா மறையுமென்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த தெல்லா காண்பமன்றோ
வீண்படும் பொய்யிலே நித்தம்
விதி தொடர்ந்திடுமோ
காண்பதுவே உண்மை கண்டாய்
காண்பதல்லாது றுதியில்லை
காண்பது சக்தியாம் - இந்தக்
காட்சி நித்தியமாம்"

என உலக இருப்பை - காட்சிப் பொருள்களை உண்மை என்ற நிலைக்கு வந்து பாடுகிறார். காண்பதல்லால் உறுதியில்லை என்பதில் உலகாயதச் சிந்தனை தெரிகிறது என கலாநிதி நா சுப்பிரமணியன் (இந்தியச் சிந்தனை மரபு) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடவுள் உண்மை உயிர் உண்மை உலக உண்மை இவற்றை வலியுறுத்திய பாரதியை சித்தாந்தக் கொள்கைகளும் வெகுவாகக் கவர்ந்துள்ளன எனக் கூறுவதில் தவறில்லையன்றோ. தேசிய போராட்டச் சூழலில் வாழ்ந்து தேசத்தையே தெய்வமாகக் கருதி நின்ற பாரதியின் தேசப்பற்று உலகை மாயை எனக் கருத வைக்கவில்லை.

"நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி"

என்ற பாரதியின் கவிதைப் பகுதி, பாரதி சக்தி பற்றி கொண்ட சிந்தனைகள் பற்றிய இவ் ஆய்வுக்கு நிறைவுரையாக அமையட்டும். நல்லவும், அரியனவுமான உயர் சிந்தனைகள், உயர் பண்பாடுகள் என்றும் போற்றப்படவேண்டியவை. அவை நாளொரு வண்ணமும் மெருகூட்டப் படவேண்டியவை. பாரதியின் சக்தி வழிபாடு, சக்தி பற்றி உயர் பார்வை யாவராலும் என்றும் உணர்ந்து போற்றத் தக்கனவாம். பாரதி கண்ட சக்தி உயர் பண்புகளினதும் உயர் தத்துவங்களதும் அதி உயர் நிலையாகும்.

திருமதி சசிகலா சிவநாதன்
B.A.(Hons) MEd
ஆசிரியை
யா/இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கு

மனிதனுக்குத் துன்பஞ் செய்கின்றவை பல. அவற்றுள் இருள் ஒன்று. இருளில் கட்டையா? கள்வனா? காலில் பட்டது சந்தனமா? சாணமா? அரவமா? கயிறா? என்று அறிந்து கொள்ள முடியாது. இருளில் ஒரு வேலையுஞ் செய்ய முடியாது. நடமாடவும் முடியாது. இரவில் நமது வீடுகளில் திடீரென்று மின்சார விளக்குகள் அணைந்து விட்டால் அப்படியே அத்தனை பேரும் அசைவற்று நிற்க நேர்கின்றது.

விளக்கு நமக்கு எத்தனை வண்ணமாக உதவி செய்கின்றது என்பதை நாம் அது இல்லாதபோதுதான் உணரமுடியும். தாய் நம்மை எப்படி எப்படி எப் படியெல்லாம் வளர்க்கின்றாள் என்பதைத் தாய் இல்லாத போதுதானே உணர முடிகின்றது.

ஒரு வீட்டில் விளக்கு எரிந்தால் அந்த வீடு மங்களகரமாக இருக்கும் விளக் கின்றி இருள் சூழ்ந்த வீடு பேய் நடமாடும் பாழ் நிலம்போல் இருக்கும்.

பொருள்களை விளக்குகின்ற விளக்குகள் நான்கு எனவுணர்க. சூரியன், சந்திரன், அக்கினி, ஓசை என்ற நான்குமாகும். பகலில் பொருள்களை விளக்குவது கதிர். இரவிலே பொருள்களை விளக்குவது மதியுங்கனலும், இந்த மூன்றும் இ ல்லாதபோது ஓசை நமக்கு உதவுகின்றது.

இரவிலே ஒரு காட்டில் இருளில் வழியுங் குழியும் தெரியாது. ஒருவன் நின்று திகைக்கின்றான். அப்போது ஒரு புறத்தில் நாய் குரைத்தது. அந்த ஒலியைக் கொண்டு மக்கள் வாழவேண்டும் என்று தெரிந்து ஒலி வந்த வழியே போவான். அன்றியும் தவளைகள். கர கர வென்று கத்தும் ஒலியைக் கேட்டால் அங்கு நீர் நிலை என்று அறிகின்றான். ஆகவே கதிர், மதி, விளக்கு என்ற மூன் றும் இல்லாதபோது ஓசை நமக்கு உதவுகின்றது.

வீட்டிலேயுங்கூட இருளில் அசைவற்றுத் திகைக்கின்ற போது அங்கு யாராவது பேசினால் அந்தக் குரலோசையைக் கொண்டு இன்னார் என்று விளங்கிக் கொள் ளுகின்றோம் அல்லவா? எனவே சொல்லே ஒரு விளக்கு ஆகும்.

“இல்லக விளக்கது இருள் கெடுப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லக விளக்கது சோதியுள்ளது."

– என்கிறார் அப்பர் அடிகள்.

சொல்லே விளக்காகத் தோன்றியருளிய ஒரு வரலாறும் உண்டு. நாராயணமூர்த்தியை மனமொழி மெய்களால் வழிபட்டு மகிழ்கின்றவர்களாக விளங்கிய ஆழ்வார்கள் மூவர்கள் முதலாழ்வார்கள் எனப்படுவார்கள். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற நாமங்களை யுடையவர்கள்.

நடுக்காட்டில் திருக்கோவலூர் என்ற ஒரு திருத்தலம் உண்டு. காரி முதலிய மன்னர்கள் இருந்து அரசுபுரிந்த திருநகரம். அத்தலத்திலே எழுந்தருளியுள்ள திருமாலைச் சேவிக்கும் பொருட்டுப் பொய்கையாழ்வார் சென்றார். அத்திருக் கோயிலிலே நெடுநேரம் இறைவனை வணங்கி விட்டு ஒரு சிறு இடத்தில் சென்று படுத்து உறங்கிவிட்டார்.

நடு இரவு, குளிர் காலம், சிறு தூறல், வாடை வீசி உயிர்களை நடுக்கிக் கொண்டிருந்தது. பூதத்தாழ்வார் என்ற பெரியவர் அங்கு வந்து மெல்ல ஒதுங்கினார். படுத்திருந்த பொய்கையாழ்வார் பளிச்சென்று எழுந்து இந்த இடம் ஒருவர் படுக்கவும், இருவர் இருக்கவும் ஆகும் என்று கூறி அவரை யருகில் இருக்கச்செய்து தானும் இருந்தார். சிறிது நேரத்திற்குப் பின் அங்குப் பேயாழ்வார் வந்தார். அமர்ந்திருந்த இருவரும் உடனே எழுந்து, இங்கு ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்று கூறி நின்று கொண்டார்கள்.

அச் சிறு இடத்தில் மூவரும் நெருங்கி நின்றார்கள். ஒரே அமைதி, சிறிது நேரத்திற்குப்பின் கன்னங்கரேல் என்று ஒருவர் மொழு மொழு என்ற உடம்புடன் வந்து அவர்களை நெருக்கிக் கொண்டு உட்புகுந்தார்.

அந்த இடம் மிக நெருக்கமான சிறு இடம். ஒருவர் மட்டும் படுக்கவும், இருவர் மட்டும் இருக்கவும், மூவர் மட்டுமே நிற்கவும் முடியும். இப்போது நான்காவது ஒரு பேர்வழி வந்து நுழைந்து நெருக்கத் தொடங்கினார். மூவரும் திக்கு முக்காடி விட்டார்கள். மூச்சு திணறியது. "ஐயா! நீர் யார்?" என்று கேட்டார்கள். பதில் இல்லை. "ஐயா! தங்களை யார் என்று அறிய விரும்புகின்றோம்". ஒரே அமைதி. மௌனம் நிலவியது.

விளக்கில்லாமல் எப்படி அவரை இன்னார் என்று அறிய முடியும். உடனே பொய்கையாழ்வார் மொழி விளக்கு ஏற்றுகின்றார். அது சிறு விளக்கா? உலகில் உள்ள எல்லா விளக்குகட்கும் பெரிய விளக்கு. ஐந்து கண்டங்கட்கும் ஒளிதரக் கூடிய அத்துணைப் பெரிய விளக்கு. அந்த விளக்குக்கு நெய் ஒருபடி இருபடி விட்டாற் கட்டுமா? இந்தப் பூமியே அகல், கடலே நெய், மேருகிரி திரி, சூரியனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு.

"வையந் தகளியா வார்க்கடலே நெய்யாக
வெய்ய சுடரே விளக்காகச் – செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல் மாலை
இடராழி நீங்குகவே என்று"

என்று பாடினார் பொய்கையாழ்வார். அடுத்தபடி, பூதத்தாழ்வார் உள்ளத்தில் ஒரு விளக்கு ஏற்றுவாராயினார். அதற்கு அன்பு – அகல், ஆர்வம் – நெய், எண்ணம் – திரி, ஞானமே விளக்கு.

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடு திரியா – நன்புருகி
ஞானச் சுடர் விளக் கேற்றினேன் நாரணர்க்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்"

இவர்கள் இருவரும் பாடிய பின் ஒரு சோதி விளக்கு தோன்றியது. அவ்வொளியில் தம்மை நெருக்கியது யார் என்று மூவரும் பார்த்தார்கள்.

அவர் திருவுருவம் நன்கு தெரிகின்றது. உடனே பாடுகின்றார் பேயாழ்வார்.

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் – செருக்கிளர்
பொன்னாழி கண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று"

இறைவனை யார் கண்டவர்? என்று சிலர் கேட்கிறார்கள். கண்டேன். கண்டேன் என்று கூறுகின்றார் பேயாழ்வார். ஆ! ஆ! என்ன அழகு! இதோ எங்களை நெருக்கியது எம்பெருமானே!

"திரு மார்பில் திகழ்கின்ற திருமகளைக் கண்டேன். அழகிய திருமேனியைக் கண்டேன். விளங்குகின்ற கதிரவன் ஒளி போன்ற அழகிய வடிவத்தை கண்டேன். போரில் திகழ்கின்ற அழகிய சக்ராயுதத்தைக் கண்டேன். மற்றொரு கையில் அன்புள்ள பாஞ்ச ஜன்யம் என்ற சங்கையும் கண்டேன். கடல் வண்ணனாம் எம் கடவுள் பால் இன்று இத்தனையுங் கண்டேன்" என்கிறார். எனவே இதனை மொழி விளக்கு எனவுணர்க.

பாரதம் பாடிய வில்லிபுரத்தூராரின் திருமைந்தர் வரந்தருவார் பாடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாவருந் தமிழால் பேர் பெறு பனுவற்
பாவலர் பாதிநா ளிரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு
தேவரும் மறையும் இன்னமுங் காணாச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
ஏவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநா டிந்தநன் னாடு" என்பது அது.

அகில உலகங்களுக்கும் விளக்காக நின்று எல்லா வற்றையும் விளக்குகின்றவர் சிவபெருமான். அதனால் அவரை விளக்கென்றே கூறுகின்றார் மணிவாசகர்

"சோதியே சுடரே சூழொளி விளக்கே"
அது தூண்டா விளக்கு
"மாணிக்க மணி விளக்கு"

உலகெலாம் சிவமயம் ஓங்கட்டும்..

* * * * * * * * *

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அருளியது.
திரு. T. அருள்நந்தி அவர்கள் வெளியிட்ட
"வாரியாரின் அமுத மொழி" என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

தொகுப்பு – திருமதி திலகா வீரசிங்கம்

அட்டைப்படம்:

யாழ் இந்து மகளிர் கல்லூரி பவளவிழாவின் போது பிரதம அதிதியான திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை (எங்கள் சங்கப் பொருளாளர்) மங்கள விளக்கு ஏற்றுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மம் வெல்லும்

அண்மையில் 'தர்மம் வெல்லும்' என்னும் நாட்டிய நாடகம் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளால் கொழும்பில் மேடையேற்றப்பட்டது.

பாண்டவர்களில் மூத்தவனாகிய தருமன் சூதாட்டத்தில் இராச்சியத்தை இழந்து மனைவி பாஞ்சாலியையும் இழந்து துரியோதனனுடைய சபையிலே பாண் டவர்களாக அல்ல மாண்டவர்களாக இருந்தார்கள். அப்போது துச்சாதனன் பாஞ் சாலியை இழுத்து வந்து அவளின் துகிலை உரிகின்றவேளை, பாண்டவர்கள் அடிமைகளாக துரியோதனனின் சபையிலே இருக்கும்பொழுது, பாஞ்சாலி கண் ணனைத் தன்னைக் காப்பாற்றும்படி இரு கரங்களையும் எடுத்து வணங்குகின் றாள். அப்போது கண்ணன் பாஞ்சாலியின் பிரார்த்தனையின்படி சேலையை வளரும்படி செய்கிறார். துச்சாதனன் எதுவுமே செய்யமுடியாத நிலையில் நிலத் தில் விழுகிறான்.

சூதாட்டத்தில் நாட்டை இழந்த பாண்டவர்கள் பன்னிரண்டு வருட வனவாசம் செய்கிறார்கள். அதன் பின்னர் அஞ்ஞாத வாசத்தையும் முடித்துக் கொண்டு நாடு திரும்புகிறார்கள். நாடு திரும்பிய பாண்டவர்கள் இராச்சியத்தை திரும்பத் தரும்படி துரியோதனனைக் கேட்கிறார்கள். அதற்காக கண்ணனைத் தூ துவனாக துரியோதனனிடம் செல்ல வேண்டுகிறார்கள். பாண்டவர்களின் வேண் டுகோளுக்கு இணங்க கண்ணபிரான் தூது செல்கிறார். ஆனால் கண்ணபிரான் துரியோதனனிடத்தில் சகல விடயங்களையும் எடுத்துக்கூறியும் அதை அவன் தர மறுக்கிறான். அதன் பின் போர் மூண்டது. பதினெட்டு நாட்கள் நடந்த போரில் துரியோதனனாதியோர் அழிந்தொழிந்தார்கள். கடைசியில் தர்மம் வென்றது.

ஒவ்வொரு மாணவியின் பாத்திரமும் மிகவும் சிறப்பாக இருந்தது. முக்கியமாக கர்ணனுக்கு நடித்த மாணவி, அதேபோன்று கண்ணன் பாத்திரத்தை ஏற்று நடித்த மாணவி, குந்திதேவி, துரியோதனன் ஆகியோரின் பாத்திரங்களை முறையே ஏற்று நடித்த அனைவரும் எல்லோரினதும் மனதில் பதிந்தனர்.

இத்துடன் யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா கல்லூரியின் பெயரையும் புகழையும் தொய்யவிடாமல் காப்பாற்றுவது மட்டுமன் றி இக் காலகட்டத்தில் இப்படிப்பட்ட நாடகத்தை கொழும்பில் தம் மாணவிகளைக் கொண்டு நடாத்திக் காட்டியமை பெருமைக்குரியது.

இவ் விழாவிற்கு பிரதம அதிதியாக கொழும்பு மாநகரசபை அங்கத்தவர் டாக்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். இராமஜெயம் கலந்து விழாவைச் சிறப்பித்தார்.

இக் கலை நிகழ்ச்சியை இக் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம், கொழும்புக் கிளை, குறிப்பாக தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர், பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை ஆகியோர் ஒழுங்கு செய்திருந்தனர்.

'தர்மம் வெல்லும்' என்ற இக் கலைப்படைப்பு உளச்சிதைவைச் சீர் செய்யும் ஒரு மருந்தாகவும் அமையும் என்ற உண்மையை இந்த நாடகம் எடுத்துக் காட்டுகிறது. உண்மையிலேயே நடன ஆசிரியை தனது நடன நெறியாள்கையால் காலத்தின் தேவையை உணர்ந்து செயற்பட்டுள்ளார். அத்துடன் பாத்திரத்திற்கு ஏற்ற ஆடைகள் சிறப்பாக ஒவ்வொரு பாத்திரத்தின் குணவியல்புகளைத் தெளிவுபடுத்தின.

## செல்வத்தம்பி மாணிக்கவாசகர்

நன்றி: ஞாயிறு தினக்குரல் 04 ஜனவரி 2004 பக்கம் 25

குறிப்பு: இந்த நாட்டிய நாடகத்தின் இரு காட்சிகள் பின் உள் அட்டையில் உள்ளன.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

மரண அறிவித்தல்:
எங்கள் கல்லூரிப் பழைய ஆசிரியை திருமதி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி, யாழ் இந்துக் கல்லூரி பழைய ஆசிரியர் திரு. செல்லப்பா முத்துக்குமாரசுவாமி ஆகியோரின் ஏகபுத்திரனும், எங்கள் கல்லூரிப் பழைய மாணவிகள் திருமதி அனுசூயா இரவிராஜ், திருமதி கௌரி இரமணா, ஆகியோரின் இளைய அன்புச் சகோதரனும், இலண்டன் "வால்தம்ஸ்ரோ" ஸ்ரீகற்பக விநாயகரின் சீரிய தொண்டனும், இலண்டன் "பாணட் சொலிற்றெயார் நிறுவனத்தின்" முகாமைத்துவக் கணக்காளராகப் பணியாற்றியவரும், பணிவுமிக்க சமூக, சமய சேவையாளனுமான தொண்டன் யோககுமாரன் 14.12.2003 அன்று காலமானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோயில் (கீரிமலைச் சிவன் கோயில்)

அமைவிடம் - புராதன காலத்தில் திருத்தம்பலேஸ்வரம் என்றும், பின்னர் நகுலேஸ்வரம் எனவும் அழைக்கப்படும். இக்கோயில் யாழப்பாணத்தின் வட பாகத்தில் காங்கேயன் துறைமுகத்திலிருந்து 3 மைல் தொலைவில் சாகர சங்கம தீர்த்தக் கரையிலே அமைந்திருக்கிறது. இது மூர்த்தி, தீர்த்தம், தலம் என்னும் மூன்றிலும் விசேடம் பெற்றது. இட்ட சித்திகளைக் கொடுப்பது. மனோலயத்துக் கும், வியாதி நீக்கம் முதலியவற்றுக்கும் ஏற்றது.

பண்டைய வரலாறும் சிறப்பும் - பண்டைக்காலத்திலே சிவனுக்கும், அம்மனுக் கும் வெவ்வேறான கோயில்கள் அமைந்திருந்தன. இறைவனின் பெயர் திருத்தம் பலேச்சுரன். இறைவியின் பெயர் திருத்தம்பலேசுவரி. இவைகளின் சமீபத்தில் கதிரையாண்டவர் கோயிலும் (மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்) உள்ளது. இக் கோயில்கள் இவ்விடத்தில் தோன்றிய காரணத்தால் இந்தக் கிராமம் கோவிற் கடவை எனப் பெயர் பெற்றது. இடற்குரிய தல விருட்சம் கல் ஆலமரம்.

மற்றும் கைலாசபுராணத்தில் இராவணனின் யாழோசையினாலே பெரிதும் கவரப் பெற்ற கந்தருவனான சுசங்கீதன் இராவணனின் யாழினை கவர்ந்து கொள்வதற் குத் தருணம் பார்த்திருந்தான். இராவணனை இராமபாணம் தாக்கிய போது, அவன் கையிலிருந்த யாழ் நழுவி விழ, அதனை சுசங்கீதன் பற்றிக் கொண் டான். அவன் கீரிமலையில் யாழ் வாசித்து பரமேஸ்வரனை தொழுதான். பார்வதி சமேதராக காட்சி கொடுத்த மகேஸ்வரன் காடுகொன்று நாடாக்கி நகரமைத்து அதனை வீணாபணம் என்னும் பெயரோடு ஆட்சி புரிவாய் என்று திருவாய் மலர்ந்தருளினார். இதுவே யாழ்ப்பாணம் என்னும் பெயரின் உற்பத்தியை விளக் கும் கதை. இங்கு குடிப்பெருக்கமும், வேளாமை போன்ற தொழில்களும் ஆரம் பமாகிய காலம் முதலாகவே நகுலேச்சுவரம் நிலைபெற்று வருகின்றது.

நகுலேச தீர்த்தமானது நகுலகிரிக்கு மேற்குப் பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்த நீரும், வடக்கிலுள்ள உப்பு நீரும் கலந்து கிழக்கு நோக்கிய சிவரூபமும், சக் திரூபமுமாக இருக்கின்ற இயல்பினாலே 'கங்கா சமுத்திர சங்கமம்' என்றும் 'கண்ட தீர்த்தம்' என்றும் அழைக்கப்படும். அளவில்லாத அன்பர்கள் இங்கு சென்று விதிப்படி ஸ்நானம் செய்து பயன் பெற்று வருகிறார்கள். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கும் இதுவே தீர்த்தமாகும். இங்குள்ள சமுத்திரத் தீர்த்தத் தின் காரணமாக நகுலேச்சரம் யாழ்ப்பாணத்துச் சைவர்களின் சமயாசாரங்களில் மிகுந்த சிறப்புடையதாய் விளங்குகின்றது. சகிண்டீகரணம், அஸ்திசஞ்ஜயனம் முதலிய கிரியைகளுக்குச் சிறப்பாகவுள்ள புண்ணிய சேஷத்திரமாகவும் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காலமாக விளங்கி வருகின்றது.

முன்னொரு காலத்திலே மேருமலையின் இடப்பாகத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த சுதாமா என்னும் முனிவருடைய சாபத்தினால் துர்த்தரன் என்னும் வேடன் கீரிமுகம் பெற்றான். வேடனும் நடுநடுங்கி சாபத்துக்கு விமோசனம் வேண்டி நின்றான். முனிவரும் மனம் இறங்கி "இலங்கையின் வடக்கே ஓர் உயர்ந்த மலையிருக்கிறது. அங்கு சென்று கருமயோகஞ் செய்தால் கீரிமுகம் மாறி மோட்சமும் பெறுவாய்" என்று கூறி யோக மார்க்கங்களை உபதேசித்து அனுப்பினார்.

நகுலம் என்னும் சமஸ்கிருத மொழிச் சொல்லுக்கு கீரி எனப் பொருள்படும். இங்கு வந்த வேடனும் கங்கா தீர்த்தத்தில் நீராடி, ஈசுரவழிபாடு, செபம் முதலியன செய்து கொண்டிருந்தான். திருவுளங்கொண்ட சிவபெருமான் உமாதேவியாரோடும், முருகப்பிரானோடுங் கூடி இடபாரூடலாய்ச் காட்சி கொடுத்தார். அப்போது அவ்வேடனாகிய நகுலமுனிவர் தோத்திரஞ் செய்து வணங்கினான். சிவபெருமான் "அறிஞனே. நீ இப்பொழுது அழகிய முகம் பெறுவாய், நீ தவம் செய்த இம்மலை நகுலமலை என்றும், உனக்கு அருள் செய்த எம் நாமம் நகுலேஸ்வரர் என்றும், தேவி நாமம் நகுலாம்பிகை என்றும், தீர்த்தம் நகுலேச தீர்த்தம் என்றும் வழங்குக" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். நகுலமுனிவர் பின்னும் பலகாலம் தவஞ் செய்து மோட்சமடைந்தார்.

முருகன் அருளால் இங்கு வந்து நகுலேச தீர்த்தத்தில் நீராடி, நகுலேஸ்வரர் கோயிலையும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலையும் வழிபட்டு வந்த மாருதப் புரவீகவல்லியை நகுலேசர் சந்திதானத்தயலிலே முதல் கண்ட உக்கிரசிங்க மகாராசன் அவளை விவாகஞ் செய்ய வேண்டும்மென்று தீர்மானித்துக் கொண்டான்.

நளமகாராசன், முசுகுந்தச் சக்கரவர்த்தி, இராமர், அருச்சுனன் முதலிய பலர் நகுலேஸ்வரத்துக்கு வந்து, நகுலேசு தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, நகுலாம்பிகாசமேத நகுலேசுவரப் பெருமானைப் பக்தி சிரத்தையோடு வழிபட்டு, இட்ட சித்திகளைப் பெற்று உய்தார்கள்.

பொருள் கவர்தலும், கத்தோலிக்க மதப் பரப்பலும் கொண்ட போர்த்துக்கேயர் கழுகு நோக்கிலிருந்து நகுலேஸ்வரமும் தப்பிற்றலது. அவர்கள் தம்மோடு ஒன்றி நின்ற பரராசசிங்கன் இறக்கும் வரையில் பொறுத்திருந்து அவன் இறந்தவுடன் கோயிலை இடித்தழிக்க முற்பட்டனர். விடயத்தை ஏலவே அறிந்த கோயிற் குருக்கள் ஆலயத்திலிருந்த விக்கிரகங்களைக் கோயிற் கிணற்றிலிட்டு மண்ணால் மறைத்துவிட்டு நீங்கினர் என்பர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் புராதன ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென பிரசாரம் செய்ததையடுத்து இதனையும் சீரமைக்க முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்டது. அதனால் தூண்டப்பட்ட ஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் முயற்சியால் திருப்பணி நிறைவேறி 1895ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

1918ஆம் ஆண்டு கோயில் தற்செயலாகத் தீப்பற்றி எரிந்தது. அதன் பின் வெவ்வேறு கால கட்டங்களிலே திருப்பணி வேலைகள் நடைபெற்றன. இந்தியாவிலிருந்து சிவாச்சாரியார்களை வரவழைத்து 1953ஆம் ஆண்டிலே மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்தனர். 1955ஆம் ஆண்டிலே சிவன் கோயில் வாசலிற் கொடியேற்றி வருடாந்த மகோற்சவத்தைத் தொடக்கினார்கள். 1973ஆம் ஆண்டிலும் மகா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்றது. அம்மன் கோயிலில் 1976ஆம் ஆண்டு முதலாக வருடந்த உற்சவம் நடைபெற்று வந்தது.

கோயிலின் தோற்றம் – சிவன் கோயில் கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், கோபுர வாயில், பரிவார தேவர் கோயில்கள், பிராகாரம் என்னும் அமைப்புக்களுடன் விளங்குகின்றது. கோயிலின் அடித்தளமான பீடமும், இங்குள்ள தூண்களும், விமானத் தளங்களும் வெள்ளைக் கல்லினால் வேலைப்பாடுகளோடு அமைந்துள்ளது. இறையகத்தின் தெற்கு மாடத்திலே தக்ஷிணாமூர்த்தியும், மேற்கு மாடத்திலே இலிங்கோற்பவரும் அமைந்துள்ளனர்.

பிராகாரத்தின் உள்ளே பரிவார தேவர்களின் கோயில்கள் உள்ளன. அவை தள அமைப்போடு கூடிய விமானம் பொருந்தியனவாகும், பிள்ளையார், சண்முகர், சோமஸ்கந்தர், மகா விஷ்ணு, மகாலக்ஷ்மி, பஞ்சலிங்க வடிவிலான பரமேஸ்வரர் ஆகியோரின் கோயில்கள் மேற்குப்புறத்திலுள்ளன. கிழக்கிலே வைரவர் சந்நிதானமும், நவக்கிரக நிலையமும் உள்ளன.

நிருத்த மண்டபத்தின் வடபால் நடராஜரின் உருவத்தைத் தெற்கு நோக்கிய வண்ணமாய் அமைத்துள்ளனர். இரண்டாம் பிராகாரத்தின் வடபுறத்திலே துர்க்கை அம்மனின் கோயில் காட்சியளிக்கின்றது.

இந்த ஷேத்திரத்திற்கு நூற்றெட்டு அடி உயரங் கொண்ட ஒன்பது தள இராஜகோபுரத்திற்கு நவரத்தின கர்ப்பாதார சங்குஸ்தாபனம் 19.01.1981ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

மூர்த்தி, தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற அருள்மிகு நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தின் இராஜ கோபுரத் திருப்பணி தொடங்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

பூசைகளும் விழாக்களும் – இங்கு நாள்தோறும் ஆறு காலப் பூசை நடைபெறும். மாதப் பிறப்பு, வருஷப் பிறப்பு, சித்திரை பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆவணி மூலம், மானம்பூ, புரட்டாதிச் சனி வாரம், ஐப்பசி வெள்ளி, கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவெம்பாவை, திருவாதிரை, சொர்க்கவாயில் ஏகாதசி, தைப்பொங்கல், தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் முதலான தினங்களில் நைமித்திய உற்சவங்கள் சிறப்பாக நடைபெறும்.

இவற்றோடு மாதம்தோறும் சோமவார விழாக்கள் அலங்கார உற்சவங்களாக நடைபெறும். கார்த்திகை மாதத்து நித்திய சோமவார விழாக்கள் முழுவதும் சிறப்பாக நடைபெற்றுச் சங்காபிஷேகத்தோடு நிறைவுபெறும்.

சிவன் கோயிலில் வருடாந்த மகோற்சவம் மாசி மாதத்தில் நடைபெறும். சிவராத்திரி அமாவாசையன்று தீர்த்த உற்சவம் நிகழும். அம்மன் கோயிற் பங்குனி மாதத்திலே கொடியேற்றத் திருவிழா நடைபெறும். சித்திரை வருஷப் பிறப்பிலே தேர்த் திருவிழாவும், தீர்த்தமும் நடைபெறும். தொன்று தொட்டு மரபுநிலை வழுவாது புராணபடனம் நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத்தைச் சூழப் பல திருமடங்களும் யாத்திரிகர் வசதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன. கதிரவேலு சிறாப்பர் மடம், சித்தங்கேணி வைத்திலிங்கம் மடம், தொல்புரம் கிருஷ்ணபிள்ளை மடம் போன்றவை குறிப்பிடத்தக்க சிலவாகும்.

<u>நூல்கள்</u> – இவ்வாலயத்தின் தொன்மை பற்றிக் கூறும் நூல்கள் தட்சணகைலாய புராணம், கைலாயமாலை, நகுலாசல புராணம், நகுலமலைக் குறவஞ்சி, நகுலமலைச் சதகம், நகுலகிரி புராணம், நகுலேஸ்வரர் விநோத வித்திய கவிப்பூங்கொத்து என்பனவாம்.

இவ்வாலயத்திற்குத் திருப்புகழ்ப் பாடல் ஒன்றும் உண்டு என்றும் திருப்புகழில் 'அருக்கோணாமலை' எனப் போற்றப்படுகின்ற தலம் இதுவே எனவும் கொள்வர்.

இவ்வாலயத்தோடு ஒட்டிய 'சிவநெறிக்கழகம்' எனும் சைவநெறி பரப்பும் மன்றம் சைவ மகாநாடுகளையும் சைவக் கருத்தரங்குகளையும் சைவசமய அறிவுப் போட்டிகளையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாலயத் தீர்த்தக் கரையின் சூழலிலே பல அநுபூதிமான்களது சமாதிகள் உள.

கீரிமலையிலிருந்து காங்கேசன் துறையை நோக்கிக் கடற்கரை ஓரமாக ஏறத்தாழ ஒரு கிலோமீற்றர் தூரத்துக்குச் சென்றால், புராதனகோயில் அமைந்திருந்த அலைமேட்டினையும் வரலாற்றுப் புகழ் பெற்ற நீர்ச் சுனையையும் காணலாம்.

தொகுப்பு
திருமதி. விமலா மணிவாசகன்

---

நன்றி :- இந்து சமய திணைக்களத்தின் வெளியீடான "சிவராத்திரிசிறப்பு", "இலங்கையின் இந்துக் கோயில்கள்", "அகில இலங்கை இந்து மாமன்றம் கட்டிடபூர்த்தி சிறப்புமலர்" என்னும் நூல்கள், ஆண்டு 10 சைவநெறி புத்தகம், புதின பத்திரிகைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கனியமுதன் கந்தன்

கும்மியடி பெண்ணே கும்மியடி யக்
குன்றாடும் குமரன் பேர் சொல்லிச் சொல்லி
-(கும்மி)

நாவல் பழத்தாலே ஒரு
நாவல் பழத்தாலே ஔவைக்கு
ஞானம் புகட்டியவன் கந்தன்
ஞனம் புகட்டியவன்

ஞானம் புகட்டிய கந்தனையே
ஞாலம் புகழ்ந்து பாடிடுமே
ஞாலம் புகழ்ந்து பாடிடுமே
-(கும்மி)

மாங்கனி ஒன்று கிட்டவில்லை என்று
ஆண்டியானானே அந்தப் பழநி
ஆண்டவனை நாம் துதித்திடுவோம் - பழநி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனை நாம் துதித்திடுவோம்
–(கும்மி)

தமிழென்னும் கனியைச் சுவைத்திடுவான்
பழம் பெரும் பரம்பொருள் பயந்த கந்தனக்
கனியமுதன் கந்தன்
குன்றில் நின்றாடுவானக்
குன்றாடும் கந்தனைப் போற்றிடுவோம் – நாம்
குன்றாடும் கந்தனைப் போற்றிடுவோம்
– (கும்மி)

தினந்தோறும் அவன் நாமம் சொல்லவே
வினையெல்லாம் அகன்றிடும் வேரோடு

வல்லவன் வினையறுக்கும் வள்ளலவன்
மெல்ல மயிலாடி வருவான் அம்
மயிலாடும் முருகனை தொழுவோமே
மயிலாடும் முருகனைத் தொழுவோம் நாம்

ஆக்கம் திருமதி திலகா விவேகானந்தன் விஜயரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் நடாத்திய பெண்களுக்கான இலவச மருத்துவ முகாம் பற்றிய அறிக்கை.

இடம்: பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்.
75 லொறன்ஸ் வீதி
கொழும்பு 4

நேரம்: **9.30** மு . ப – **12.30** பி . ப

திகதி: 08 . 06 . 2003 – ஞாயிற்றுக் கிழமை.

ஆக்கம்
திருமதி. ஷர்மிலா விஜயராஜ்
பழைய மாணவி (1990)
யாழ். இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பை ஏற்று இலவச சேவைக்கு வருகை தந்திருந்த மருத்துவ நிபுணர் குழு

வைத்திய கலாநிதி நிர்மலா பெஞ்சமின்

வைத்திய கலாநிதி திருமதி. நந்தினி மோகன் சுப்பிரமணியம்

வைத்திய கலாநிதி திருமதி. சசிகலா சுரேஷ்

வைத்திய கலாநிதி திருமதி. பாலினி பொன்கோவன்

வைத்திய கலாநிதி செல்வி. தர்மினி குமாரசாமி

இந் நிகழ்ச்சிக்கான மண்டாம் 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தயார்ப்படுத்தப் பட்டிருந்தது. முன்பகுதியில் மலிவு விற்பனைப் பொருட்காட்சியும், சங்க அங்கத்தினரின் இலவச குளிர்பான விநியோகமும் இடம் பெற்றன. மண்டபத்தின் கடைசிப் பகுதியில் வைத்திய நிபுணர்களுக்கான இடவசதி அமைக்கப்பட்டிருந்தது.

அவ்விடத்துக்கும், நோயாளர் பிரிவுக்கும் இடையில் காணப்பட்ட திரையில் பயனுள்ள மருத்துவக் குறிப்புக்கள் படமூல விளக்கங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. எய்ட்ஸ் மற்றும் சார்ஸ் நோய்களுக்கான அறிகுறிகள், பாதிப்புக்குள்ளாகும் உடல் பாகங்கள், தொற்றுக்களிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் முறைகள் என்பன மும்மொழிகளிலும் காணப்பட்டன.

அவை தவிர சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதாரப் பழக்க வழக்கங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள், உடற்பயிற்சிகள் என்பன பற்றிய சுவரொட்டிகளும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவை தவிர மருத்துவ சஞ்சிகை வெளியீடுகளும் வருபவர்களின் பார்வைக்காக ஆங்காங்கு வைக்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை 9.00 மணியிலிருந்து மருத்துவ முகாமுக்கு மக்கள் வரத் தொடங்கினர்.

9.30 மணியளவில் வருகை தந்த மருத்துவ நிபுணர்களை யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் தலைவி செல்வி. சற்சொரூபவதி நாதன் தலைமையில் பொருளாளர் திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை, செயலாளர் திருமதி. சிவகாமி அம்பலவாணர், முன்னாள் தலைவி திருமதி. தயாநிதி செல் வநாயகம், உப தலைவி திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம் ஆகியோர் பழக்கூடை வழங்கி கௌரவித்து மண்டபத்துள் அழைத்து வந்தனர்.

வைத்திய நிபுணர்கள் தத்தம் இடங்களில் அமர்ந்ததும் நோயாளிகளைப் பரிசோதிக்கும் பணி உடனடியாக ஆரம்பமாகியது.

மருத்துவத் தாதி செல்வி சாகரிகா இன்முகத்துடன் சுறுசுறுப்பாக பரிசோதிக்கும் பணிகளில் உதவி புரிந்தார். மருத்துவ முகாமுக்கு வந்திருந்த ஏறத்தாழ அறுபது பேர்களுக்கும் எமது வைத்திய நிபுணர்கள் பொறுமையுடனும், நிதானமாகவும் பரிசோதித்து வேண்டிய ஆலோசனைகளையும், தேவையெனில் காண வேண்டிய சிறப்பு வைத்திய நிபுணர்களின் பெயர்களையும் பரிந்துரை செய்தனர்.

சிலருக்கு மருந்துச் சீட்டும் வழங்கப்பட்டது. இவ்விதம் வழங்கப்பட்டவருள் ஒரு வயோதிபப் பெண்மணிக்கு சங்கப் பொருளாளர் தனது செலவில் அம்மருந் தை வாங்கி உதவினார். மருந்துப் பொருட்களையும் இலவசமாக வழங்க வேண்டும் என்ற ஆர்வம் சங்கத்துக்கு இருந்த போதிலும் நிதிப்பற்றாக் குறையால் அவ்விதம் செய்ய முடியாமல் போய்விட்டது.

வந்திருந்தோர் அனைவரும் அவசரமின்றியும், நிதானமாகவும் வைத்திய நிபுணர் களிடம் தமது பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடி தீர்வு பெற முடிந்தமை பற்றி திருப்தி தெரிவித்தனர்.

இரத்த அழுத்தம், பார்வைத்திறன், உடல் நிறை – உயர விகிதம் என்பன பற்றி பரிசோதிக்கப்பட்டது.

நீரழிவு நோய் பற்றிய பரிசோதனை செய்ய முடியாமல் போனது பலருக்கும் ஏமாற்றத்தையே அளித்தது. நீரிழிவு, இரத்த மற்றும் சிறுநீர் மாதிரிகளின் பரிசோதனைகளையும் சேர்த்து முழுநாள் மருத்துவ முகாமாக வைத்தால் நல் லது என்று வந்திருந்தோர் சிலர் அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆயினும் தனித்து ஒரு அமைப்பினால் அவ்விதம் முழுநாள் மருத்துவ முகாம் நடத்துவது கடினம் என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ முகாம் ஒரு புறம் நிகழ

மற்றுமோர் பகுதியில் சங்கம் ஏற்பாடு செய்த மலிவு விற்பனைப் பொருட்காட்சியும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. யாழ்நாதம் நூல் பழைய, புதிய வெளியீடுகளின் பிரதிகள் விற்பனை ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, இன்னோர் புறம் இயற்கையுணவுகள் மற்றும் சத்துணவுப் பண்டங்கள், மரக்கறி வகைகள், மற்றும் பலகார வகைகள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம் நிறுவனம்' பனம் உற்பத்திப் பொருட்களான ஒடியல், ஒடியல் மா, பனம்களி, பனம் கருப்பட்டி, பாமி பற்பசை, பனாட்டு, பனம் பணியாரம் மற்றும் பொருட்களை காட்சிக்கு வைத்திருந்தது.

இன்னோர் புறம் புதிய மரக்கறி வகைகளை பொதி செய்து வரிசைப் படுத்தி அடுக்கி வைத்திருந்தளர்.

தெகிவளையைச் சேர்ந்த தனி முயற்சியாளர் ஒருவரின் தயாரிப்புக்களான இனிப்பு மற்றும் கார பலகார வகைகள் மற்றுமோர் பகுதியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

மகாவலி அபிவிருத்தி சபையின் சேவா வனிதா பிரிவின் இயற்கை மற்றும் சத்துணவுக் காட்சியகத்தில் மகாவலிப் பிரதேச உற்பத்திகளான அரிசி, பருப்புவகை, பயறுவகை, கௌபீ, கித்துள் பொருட்கள், மல்லி மற்றும் கடுகு போன்ற உணவுச் சுவையூட்டிகள், மூலிகை உற்பத்திப் பொருட்கள், சீனிச்சம்பல் மற்றும் பழப்பாகு போன்ற தயாரித்த உணவுவகைகள் போன்றன காட்சிக்கும், நலச் சேவைகள் சங்க விலையில் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன.

முங்சக்தி எனப்படும் பயற்றுச் சத்துணவும், சமைத்த பயற்றுணவுப் பொதியும் வந்திருந்தோருக்கு மகாவலி சேவா வனிதா பிரிவின் பணிப்பாளரினால் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

மறு புறத்தில் சாய்கணேஷா சிற்றுண்டிச் சாலையின் உணவு விற்பனை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்த அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் இலவச குளிர்பான விநியோகம் நடைபெற்றது. இதற்குத் தேவையான எலும்பிச்சைரசத்தை சங்க அங்கத்தினர் தத்தம் வீட்டிலிருந்து தயாரித்து எடுத்து வந்திருந்தனர். இதனை உப தலைவி திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தனும், இணைச் செயலாளர் திருமதி. திலகவதி வீரசிங்கமும் பொறுப்பேற்று விநியோகித்தார்கள்.

நிகழ்ச்சிக்கான விளப்பரப் பொறுப்பை சங்கத் தலைவியும், மண்டப ஒழுங்கு படுத்தும் வேலையாட்கள் செலவையும், பாவித்த மேசைக் குரிய கட்டணத் தையும் செயலாளரும், வைத்திய நிபுணர்களுக்கான பழக்கூடைச் செலவை பொருளாளரும், மருத்துவத் தாதிக்கான செலவை இணைச் செயலாளரும், மனமுவந்து ஏற்றுக் கொண்டனர்.

வைத்திய நிபுணர்களில் நால்வர் எமது பாடசாலையின் பழைய மாணவிகள் என் பதால் இந்த இலவச மருத்துவ முகாமில் தமது பாடசாலையின் பெயரால் சேவையாற்றுவதில் மகிழ்ச்சி தெரிவித்தனர். அவர்களது சேவையை இ லவசமாகப் பெற்றதில் எமக்கும் பங்கு பற்றியோருக்கும் மகிழ்ச்சியே.

சிறப்பாக நடைபெற்ற இவ் இலவச மருத்துவ முகாமானது மதியம் 1.00 மணியளவில் வைத்திய நிபுணர்களுக்கான நன்றி தெரிவித்தலுடன் இனிதே நிறைவு பெற்றது.

## கல்லூரியின் சிறந்த மாணவிகள்

2001 செல்வி காயத்திரி சிற்சபேசன்
2002 செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன்
2003 செல்வி நிலக்சி மகாதேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RANAWARA HERBAL - CASSIA AURICULATA

## பொன் ஆவரசம் பூ

Infusion of dried flower and buds of Ranawara are used as a substitute for tea.

This drink helps the purification of urine flow, by increasing filtration rapidity. Also it purifies the blood and therefore it helps to prevent skin diseases.

Ranawara cools the body; relieves gastritis; also helps to reduce tiredness. Ranawara contains nutritional values including vitamins and minerals.

Fresh leaves are good if made as a curry or varai (mallung) and eaten with rice or pittu. Most Tamils use the leaves rather than the dried flowers, but the flowers have more values, easy to prepare, can keep for a long time and cheap also. You can buy it in any herbal medicine shops.

Mrs. Thilaga Weerasingham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***யாழ் – இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் (ஐ.இ)***

***Jaffna - Hindu Ladies College Old Girls' Association (U.K)***

## Secretary's Report

Jaffna Hindu Ladies' College Old Girls' Association (UK) was inaugurated in July 1993 with ten people who were interested in playing Netball for TSSA (formally JSSA) (UK). After ten years, this association has grown to about 60 members.

### Aims & Objectives;

To render to their Alma Mater financial assistance as may be required by it for its general well being, future educational development and rehabilitation.

To promote and encourage sports, social and cultural activities designed to strengthen the bonds of friendship, co-operation and comradeship among the Hindu Ladies and their families.

### Activities and Achievements: 2001 - 2003

In 2001, three of our players were selected to play for TSSA (UK) team when they invited a team from Canada. The same three players were again selected for TSSA (UK) team last year, which travelled to Canada to play against Tamil school association in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Canada.

Last year, for the first time we participated in British Tamil Association (BTA) tournament and we were runners up and also one of our players was nominated as player of the tournament.

In May last year (2002), our association organised a very successful get together to honour Mrs Visvanathan (former JHLC teacher) in Walthamstow (East London). This get together provided opportunity to meet past pupils and teachers and gave an opportunity to recruit new members for the association.

Our association organised a successful fund raising cultural show **"Ponmaalai Poluthu"** on the 14 September 2002. Dances, music, violin and light music were part of Ponmaalai Poluthu. The old girls, their families, friends and well-wishers totalling over three hundred attended the evening.

We are planning to use some of the money raised from this event to buy necessary equipment for Jaffna Hindu Ladies College.

Devi Mylvaganam
**Hon. Secretary 2001-2003**
On Behalf of Executive Committee.
20th July 2003

| OGA Canada Endowment Fund (with OGA Colombo) | Rs. |
|---|---|
| Contribution Received during the year 2002 | 364,000.00 |
| Interest Credited | 13,139.07 |
| | 377,939.07 |
| Less: Withdrawals - Purchase of Photocopier | 135,000.00 |
| Balance as at 31st December,2002 | 242939.07 |
| Balance as at 1st January 2003 | 242,939.07 |
| Interest credited | 21,625.70 |
| Balance as at 31st December, 2003 | 264,564.77 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து மகளிர் கல்லூரியின் 60 ஆண்டு கல்விப்பணி

1943 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட யாழ் இந்து மகளிர் கல்லூரி இன்று 60 ஆண்டுகளுக்கு மேலாக மகத்தான கல்விப் பணியை வழங்கி உலகளாவிய ரீதியில் பெயரும் புகழும் ஈட்டி நிமிர்ந்து நிற்கின்றது. இத்துடன் 1993 ஆம் ஆண்டளவில் தோற்றுவிக்கப்பட்ட பழைய மாணவிகள் சங்கம் (கொழும்புக் கிளை) இன்று 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து நிற்கின்றது. இப் பழைய மாணவிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் தமது விடா முயற்சியினாலும், எடுத்த காரியத்தைச் சிறப்பாக செய்து முடிக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பதாலும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக சகல உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகின்றனர்.

2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை இக் கல்லூரியின் 60 ஆண்டுகள் கல்விப் பணியைப் பாராட்டியும் 10 ஆண்டுகள் பழைய மாணவிகள் சங்கத்தின் (கொழும்புக் கிளை) பூர்த்தியை முன்னிட்டும் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவ்விழாவிற்கு கொழும்பு மாநகர சபை அங்கத்தவரும், அகில இலங்கை சமாதான நீதிவான் சங்கத்தின் தலைவரும், கொழும்பு லயன்ஸ் கழகத்தின் கொழும்பு வட்டத் தலைவரும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முன்னை நாள் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமாகிய டாக்டர் எம். இராமஜெயம் பிரதம அதிதியாகவும், புரவலர் ஹாசிம் உமர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தார்கள். செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமைவகித்தார்.

சைவத்தமிழ் உலகிற்கு கலங்கரை விளக்காகத் துலங்கிய நாவலர் பெருமானின் காலத்திற்குப் பின்பு நலிவுறத் தொடங்கிய எங்கள் சமயமும், மொழியும் மீண்டும் புத்துயிர் பெற்று விளங்க 1888 ஆம் ஆண்டில் சைவபரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்டது. யாழ். இந்துக் கல்லூரியை நிர்வகிக்கும் பொறுப்பும் இச் சபையிடம் கையளிக்கப்பட்டது. கல்லூரியை நிர்வகிக்க ஓர் நிர்வாக சபையை சைவபரிபாலன சபை நியமித்தது. இந்த நிர்வாக சபை 1902 ஆம் ஆண்டு இலங்கை அரசினரால் உத்தியோகபூர்வமாக யாழ். இந்துக் கல்லூரியின் அதிகாரசபை என அங்கீகாரம் பெற்றது. யாழ். இந்துக் கல்லூரி அதிகார சபையினர் 13 இந்துக் கல்லூரிகளையும் பாடசாலைகளையும் நிறுவி நிர்வகித்து வந்தனர்.

இந்தச் சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய யாழ். இந்துக் கல்லூரியின் கண்ணியம் மிக்க அதிபர்கள் வரிசையில் ஏ. குமாரசுவாமியின் பரந்த மனப்பான்மை காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1935 ஆம் ஆண்டுவரை யாழ். இந்துக் கல்லூரியில் சிறுமிகளும் கல்வி கற்க வாய்ப் பளிக்கப்பட்டது.

காலகதியில் அதிபர் ஏ. குமாரசுவாமியும் அன்று வண்ணார் பண்ணையில் வாழ்ந்த பிரபல்யம் மிக்க கவிஞர் பெருமக்களும் பெண்களுக்குத் தனியாக ஒரு கல்லூரி நிறுவ வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்கள்.

இதன் காரணமாக நீராவியடியில் வாழ்ந்த சட்டத்தரணி ஆர். சிவகுருநாதரின் துணைவியார் திருமதி விசாலாட்சி அம்மையார் இராமநாதன் கல்லூரிக்கு நிகராக யாழ் நகரில் இந்து சமய கலாசார பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட மகளிர் கல் லூரி ஒன்றை நிறுவ வேண்டும் என்று அன்புள்ளம் கொண்டு தயாள மனப்பான் மையுடன் அரசடி வீதியில் தமக்கே உரித்தாக இருந்த 24 பரப்பு நிலப்பரப்பைக் கல்லூ ரிக்கென அன்பளிப்புச் செய்தார். இவரே இக் கல்லூரியின் ஸ்தாபகர் என்னும் பெருமையையும் பெற்றார்.

1943 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ஆம் நாள் அதிகாரசபை நிறுவிய மகளிர்க்கான ஒரேயொரு கல்லூரிதான் யாழ். இந்து மகளிர் கல்லூரியாகும். இக்கல்லூ ரியானது யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து பிரிந்த ஒரு கிளையாக பரோபகார சிந் தையுடன் விளங்கிய சிவகுருநாதர் பொன்னுசாமியின் பொன்னாலயம் என்னும் இல்லத்தில் முதன் முறையாக இயங்கத் தொடங்கியது. இக் சல்லூரியின் மாணவர் தொகை கூடியதன் காரணமாக கல்லூரி 1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி யாழ். இந்துவின் விளையாட்டு மைதானத்திற்கு மாற்றப்பட்டது.

கல்லூரி ஸ்தாபகர் எனப் போற்றப்பட்ட திருமதி விசாலாட்சி அம்மா சிவகுருநாதர் அவர்கள் நன்கொடையாகத் தந்துதவிய அரசடி வீதியில் உள்ள விசாலமான நிலப்பரப் பில் நிரந்தரமான இடத்தில் உரிமையுடனும், உவகையுடனும் அடியெடுத்து வைத் தார்கள். 1946 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் நாள் கல்லூரியின் சரித்திரத் தில் மறக்க முடியாத ஒரு நான்னாளாகும். இக் கல்லூரியின் முகாமையாளரான சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியால் கல்லூரி விஞ்ஞான கூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட் ட வைபவத்தையும், கல்லூரி திறப்பு விழாவையும், அதிகாரசபையினர், கல்லூரி அதிபர், ஆசிரியைகள், மாணவிகள் அனைவரும் அமைதியாகவும், ஆனந்தமாகவும் கொண் டாடினார்கள்.

1978 ஆம் ஆண்டுடன் பாலர் வகுப்புத் தொடக்கம் 5 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புக்களைக் கொண்ட பகுதி இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை என்னும் பெயரில் தனியாகப் பிரிந்து கல்லூரியின் அருகே திருமதி சி. விக்னேஸ்வராவை அதிபராகக் கொண்டு இயங்கத் தொடங்கியது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பெயரையும் புகழையும் தொய்யவிடாது காப்பாற்றிய முதல்வர்களை நாம் குறிப்பிடாவிடில் நாம் நன்றி அற்றவர்களாகி விடுவோம். இக் கல் லூரியின் முதல் அதிபராக விளங்கியவர் யாழ். இந்துக் கல்லூரியின் அன்றைய அதிபராக விளங்கிய திரு. ஏ. குமாரசுவாமி ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்ந்து செல்வி காயத்திரி பொன்னுத்துரை, (திருமதி காயத்திரி கணேசன்) அதிபரானார். இவர் ஓர் பொறியியல் பட்டதாரியாவார். 1943 ஆம் ஆண்டிலிருந்து 1944 ஆம் ஆண்டு வரை இவர் கடமையாற்றினார்.

திருமதி முத்து சோமயா (எம்.ஏ.) இந்தியாவிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தருவித்த அதிபராவார். இவர் எட்டாம் வகுப்பு மட்டுமே கல்வி புகட்டப்பட்ட நிலையை மாற்றி கல்லூரியில் சிரேஷ்ட தராதரப்பத்திர நிலைவரை மாணவிகள் கல்வி பயில வசதிகளைக் கூட்டினார்.

இதைத் தொடர்ந்து திருமதி ஜெம்மாராணி சிற்றம்பலம் (பி.ஏ.) அதிபரானார்.

திருமதி கிளாரா மொற்வாணி (எம்.ஏ.) 1945 ஆம் ஆண்டிலிருந்து 1948 ஆம் ஆண்டுவரை அதிபராக விளங்கினார்.

திருமதி சரோஜினி ராவ் (எம்.ஏ.எல்.ரி.) 1948 ஆம் ஆண்டிலிருந்து 1954 ஆம் ஆண்டுவரை அதிபராகக் கடமையாற்றினார்.

திருமதி விமலா ஆறுமுகம் (பி.ஏ.) 1954 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை அதிபராகப் பணிபுரிந்தார். இவர் இக் கல்லூரியில் ஓர் ஆசிரியராகக் கடமையாற்றி அதிபரானவர்.

செல்வி பத்மாவதி இராமநாதன் (பி.ஏ.) 1960 ஆம் ஆண்டு ஆசிரியராகச் சேர்ந்து உப அதிபராகக் கடமையாற்றி பின்பு அதிபரானார். இவர் 1976 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்தார்.

திருமதி திவ்விய சிரோன்மணி நாகராஜா ஓர் விஞ்ஞான பட்டதாரி. இவர் 1986 ஆம் ஆண்டு அதிபரானார்.

இதைத் தொடர்ந்து திருமதி ஜெயராஜ் 1993 ஆம் ஆண்டில் அதிபரானார். இவர் முதலில் யாழ். பல்கலைக் கழகத்திலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கல்வித் திணைக்களத்திலும் கடமை புரிந்தார்.

மேலும் இக் கல்லூரியின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் இக் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் (கொழும்புக் கிளை) மிகவும் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து வருகிறது.

**செல்வத்தம்பி மாணிக்கவாசகர்**

நன்றி: தினக்குரல் வெள்ளிக்கிழமை 10 அக்டோபர் 2003 பக்கம் 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆசிரியர்
# திருமதி. புஷ்பமணி சுப்பிரமணியம் அவர்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள ஊரெழு கிராமத்தில் சிறப்புடன் விளங்கிய வேளாளர் குடும்பத்திற் பிறந்தவர் சரவணமுத்து புலவர் அவர்கள். இவர் உதயபானு என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும், பிரசுரகர்த்தாவாகவும் விளங்கியவர். இவரின் வழியில் வந்தவர்களில் ஒருவர் புஷ்பமணி ஆவார்.

புஷ்பமணியின் தந்தையின் பெயர் சின்னத்தம்பி, தாயின் பெயர் அன்னபூரணி. இவர்களுடன் கந்தர் மடத்தில் வசித்து வந்த புஷ்பமணி உடுவில் மகளிர் கல்லூரியிற் கல்வி கற்றார். கல்வியில் மிகவும் சிறந்த மாணவியாக விளங்கினார். அத்துடன் சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனையாக விளங்கியதுடன் சாரணர் இயக்கத்திலும் ஈடுபட்டார். பின்னர் மகரகம ஆசிரியர் பயிற்கிக் கலாசாலையில் ஆங்கிலப் பயிற்சி பெற்றார்.

இவர் 1943ல் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் ஆசிரிய சேவையிற் சேர்ந்தார். அதன் பின் 1946ல் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கிய புஷ்பமணி 1982ல் சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை அங்கேயே கடமையாற்றினார். ஆங்கில ஆசிரியையாக இவர் இலக்கணம், இலக்கியம் கற்பிக்கும் தன்மையே தனியழகாகும். அப்போது உடற்பயிற்சிக் கென்று ஆசிரியர் இல்லாத காலத்திலேயே மாணவர்களுக்கு இவர் வலைப்பந்து பயிற்றுவித்து, அவர்களை தரமான விளையாட்டு வீராங்கனைகளாகவும் ஆக்கினார்.

இவர் கல்லூரியின் புறக்கிரியைகளில் ஆவர்த்துடன் ஈடுபட்டார். நிர்மாணப் பணிகளுக்காக வீடு வீடாகச் சென்று நிதி சேகரித்தார். 1954ல் வைகாசி 5ம் திகதியில் இருந்து 31ம் திகதிவரை இடம்பெற்ற ‘காணிவேல்’ வெற்றிகரமாக நடைபெறுவதற்கு இவரின் பங்கு அளப்பெரியது. அது மாத்திரமன்றி கல்லூரி விடுதியின் பாதுகாவலராகவும் அமர்ந்தார். கல்விச் செல்வத்துடன், ஒழுக்கத்தையும், பக்தியையும் ஊட்டி மாணவர்களை வளர்த்த பெருமை இவருக்குண்டு.

இவர் மானிப்பாய்க் காராளபிள்ளை உடையாரின் பேரனான விசுவலிங்கம் சுப்பிரமணியத்தை (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்) விவாகம் செய்து இரண்டு பெண் பிள்ளைகளைப் பெற்றார்.

தான் ஓய்வு பெற்ற பின்னும் கல்லூரியை மறவாது அதன் பொன் விழாவின் போது கொழும்பில் பழைய மாணவிகள் சங்கத்தை உருவாக்கி அதன் போஷகராக இருந்து வளர்த்த பெருமை இவருக்குண்டு. அவரின் ஆத்மா சாந்தியடைய சங்க உறுப்பினர் யாவரும் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம் இதழ் 9 புத்தக வெளியீடும் கலை நிகழ்ச்சியும் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு

இடம் - சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டி
நேரம் பி.ப. 6.15 முதல் பி.ப. 8.15 வரை
திகதி - 02.08.2003.

யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவி திருமதி சத்தியலஷ்மி சிவலிங்கத்தின் தேவாரத்துடனும் கல்லூரிக் கீதத்துடனும் பி.ப. 6.15 அளவில் விழா ஆரம்பமாகியது.

மண்டபத்தில் கூடியிருந்த அனைத்துப் பழைய மாணவிகளும் சேர்ந்து கல்லூரி கீதத்தை இசைத்ததானது எவ்வளவு தூரம் கல்லூரி வாழ்க்கை அவர்கள் மனதில் பதிந்திருந்தது என்பதைக் காட்டியது.

கல்லூரிப் பழைய மாணவிகள், அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள். ஆசிரியைகள், நடனமணிகளின் பெற்றோர்கள், உறவினர்கள், சிநேகிதர்கள் மேலும் கலை நிகழ்வுகளில் ஆர்வம் உள்ளவர்கள் என மண்டபம் பார்வையாளர்களால் நிரம்பியிருந்தது.

சங்கத் தலைவி செல்வி சற்சொருபவதி நாதனின் வரவேற்பு உரை பி.ப. 6.25 அளவில் இடம் பெற்றது. இவ் விழாவில் முக்கியமாக நூல் வெளியீடும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

அடுத்து கல்லூரிப் பழைய மாணவியும் சிறந்த சங்கீத ஆசிரியையுமான செல்வி வேல்விழி சிவசுப்பிரமணியத்தின் இசை நிகழ்ச்சி இடம் பெற்றது. இரவு 7.00 மணிவரை இடம்பெற்ற அவரது இசைநிகழ்ச்சி அருமையாக இருந்தது.

பி.ப. 7.05 இற்கு கல்லூரிப் பழைய மாணவியும் St Clares School நடன ஆசிரியையுமான திருமதி சங்கீதா முரளீதரனின் நெறியாள்கையின் கீழ் அமைக்கப்பட்ட நடன நிகழ்ச்சிகள் அரங்கேறின. முதலில் தீப நடனமும தேயிலைக்கொழுந்து நடனமும் இடம்பெற்றன. நடன நிகழ்ச்சி இரவு 7.25 வரை கண்களுக்கு விருந்தளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பிரதம அதிதி திரு. வே. தேவசேனாதிபதி அவர்களைத் தலைவி அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றும்படி அழைத்தார். பிரதம அதிதி உரையாற்றும்போது அச்சங்கத்தின் செயற்பாடுகளில் மகிழ்ச்சி தெரிவித்ததுடன் இளங் கலைஞர்களை ஊக்குவிப்பது பற்றிப் பாராட்டினார்.

அடுத்து விழாவில் முக்கிய நிகழ்வுகளுள் ஒன்றான புத்தக வெளியீடு பி. ப. 7.30 அளவில் ஆரம்பமானது. நூல் ஆசிரியை திருமதி சிவகாமி அம்பலவாணர் முதல் பிரதியை பிரதம அதிதி திரு வே. தேவசேனாதிபதிக்குக் கையளித்தார்.

சிறந்த சமூக சேவையாளரும் பெண்களின் முன்னேற்றத்துக்கு பாடுபடுபவருமான திருமதி அன்னலக்ஷ்மி இராஜதுரை இரண்டாவது பிரதியை பிரதம அதிதியிடம் இருந்து பெற்றுக்கொண்டார். மங்கையர் கேசரி கலைக்கேசரி ஆக்கங்களில் இவரின் பங்கு குறிப்பிடத்க்கது. திருமதி அன்னலக்ஷ்மி இராஜதுரையைக் கௌரவிக்கும்முகமாக பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சிறு அன்பளிப்பொன்றை வழங்கினார்.

அடுத்து யாழ் இந்து மகளிர் கல்லூரியின் முதுபெரும் ஆசிரியை திருமதி லீலா நாகரட்ணம் நூல்பிரதியை பிரதம அதிதியிடம் இருந்து பெற்றுக்கொண்டார். அடுத்து சிறப்புப் பிரதிகளை சங்க உறுப்பினர்கள் அல்லது அவர்களின் கணவன்மார்கள் பெற்றுக்கொண்டனர்.

மீண்டும் நடன நிகழ்ச்சிகள் இரவு 7.45 அளவில் ஆரம்பமாயின. ஜதீஸ்வர நடன முடிவில் சங்கச் செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர் நன்றியுரை வழங்கினார்.

அத்துடன் கலைநிகழ்ச்சிகள் தந்து இரசிகப் பெருமக்களின் செவிகளையும் கண்களையும் குளிர வைத்த யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகளான செல்வி வேல்விழி சிவசுப்பிரமணியம் மற்றும் திருமதி சங்கீதா முரளீதரன் ஆகிய இருவருக்கும் சங்கத்தின் சார்பில் சிறு அன்பளிப்புகள் அளித்து வாழ்த்தினர்.

இறுதியில் கிராமிய நடனம் இடம் பெற்றது. விழா இரவு 8.15 அளவில் இனிதே நிறைவுற்றது.

திருமதி சர்மிலா விஜயராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOSPITAL PHARMACY

The entire process of dispensing and medication to all the patients in a hospital is undertaken by the pharmacy department of each hospital. The staff who are qualified Pharmacists are responsible for all such functions.

The function of the hospital pharmacy slightly varies from country to country and also according to grade of hospitals. The hospitals in cities with a large population, with more specialized treatment pattern and flow of more drugs and services, we may call them urban areas. The rest are suburban areas and villages, where the population is less and hospitals without much specialized treatment. The hospital pharmacy also performs lesser functions, for example a manufacturing unit or research unit or quality control areas may not be there.

The following brief on hospital pharmacy is the modern and model function generally in a fully equipped hospital comprising advance consulting or specialized treatment to which patients from both urban and peripheral units are referred for treatment.

So an ideal modern hospital pharmacy comprises of the following functions and responsibilities to all in-door and out-door patients.

Hospital pharmacy receives drugs and medicines and professional supplies, stores them, dispenses them to in-patients and out-patients and may have a manufacturing extension to manufacture pharmaceuticals and parenterals in bulk.

Modern day hospital pharmacy also provides clinical pharmacy services of drug monitoring and drug delivery information system.

## FUNCTIONS OF HOSPITAL PHARMACY SERVICES

*The dispensing of drugs chemicals and pharmaceutical preparation
*The filling and labelling of drug containers.
*The inspection of all pharmaceutical supplies
*The dispensing of all narcotic drugs and alcohol and the maintenance of a perpetual inventory of them.
*Specification of the quality of drugs chemicals antibiotics biologicals and pharmaceutical supplies used in the treatment of patients.
*Sources to get the above products.
*To maintain a satisfactory system of records and book-keeping for the above products.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*To maintain adequate control over requisitioning and dispensing of all drugs and pharmaceutical supplies.
*To make large volume injection fluids and other parenterals and to maintain aseptic conditions while doing so.
*To do in-house production of drugs., the buying of which from outside sources is not prudent.
*To furnish information concerning medication to physicians, interns and nurses.

## OBJECTIVES OF A HOSPITAL PHARMACY

*To professionalize the functioning of pharmaceutical services in a hospital;.
*To contribute to the overall objectives of a hospital which is a community centre for the welfare of the patient.
*To ensure the availability of the right medication at the right time in the right dose at the minimum possible cost.
*To take upon itself the functions of materials management - purchasing, storage inventory control and flawless drug distribution system.
*To serve as a counselling department not only to the ultimate user of the drug but also to the medical staff and the nursing staff by updating them on dosage regimen - by giving instruction regarding usage, possible side effects, precautions regarding food etc.
*To act as a data bank on drug utilization.
*To make hospital self-sufficient in respect of certain critical drugs.
*To act as a profit centre and cost centre in a hospital.
*To participate in research projects.
*To plan, organize and direct pharmacy policies, procedures in keeping with the established policies of the hospital.
*To implement decisions of the pharmacy therapeutics committee.
*To co-ordinate and co-operate with other departments of a hospital.


## LOCATION AND LAYOUT OF HOSPITAL PHARMACEUTICAL SERVICES.

The Pharmacy should be located on the first floor or on the ground floor of the hospital, easily accessible to all department and nursing stations. Out patient pharmacy must give a pleasant and professional look and must have enough space for seating of patients who are waiting for medicine. It should display educative posters on health and hygiene and can offer light literature for reading to fill up the leisure time of waiting. Visitors should carry a positive image of the pharmacy. The manufacturing room and medical stores can be adjacent to the pharmacy. A-dumb-waiter should connect the two.

## FLOWCHART OF MATERIALS AND MEN.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**FLOWCHART OF MEN**: That means the users of pharmacy - the outward hospital patients and their flow.




Flowchart of patients (Defined)

**FLOWCHART FOR MATERIALS**: A pharmacy is a receiving and distribution centre of materials. The layout should ensure an unhindered flow of materials.




Flow chart for materials

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The pharmacy receives its materials from two services.

a. Medical stores and


b. The manufacturing division from the hospital.

The medical stores issues against requisitions and so also the manufacturing units. The pharmacy exercises quality control overall its material receipts. The medical stores can receive supply from centralized purchase department or decentralized purchase department. The pharmacy issues materials to inpatients in wards or out patients are served by nursing stations who receive their materials from the pharmacy.

The organized hospital pharmacy department has an integrated set-up consisting of

*Dispensing section
*Manufacturing section
*Quality control section
*Clinical pharmacy section
*Medical stores/records section

A suggested organization chart




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PHARMACIST REQUIREMENT

The manpower trained in pharmacy varies with size of the hospital and the services it offers. The number of Pharmacists required for a hospital are calculated on the basis of some workload norm like the number of prescriptions received and dispensed (and as a result, the time taken to do so) or the number of beds available in hospital and its occupancy rate.

The following is the suggested staff pattern of pharmacists as recommended by the study group of hospital.

Pharmacist Requirement

| Bed Strength | Number of Pharmacists required |
|---|---|
| Up to 50 beds | 3 |
| Up to 100 beds | 5 |
| Up to 200 beds | 8 |
| Up to 300 beds | 10 |
| Up to 500 beds | 15 |

In large hospitals (1000 beds, 2000 beds) out patients attendance as compared to bed strength in hospital is usually in the ratio of 3:1. One Pharmacist has been recommended for 133 patients.

## FLOOR / SPACE REQUIREMENT

The Pharmacy requires a minimum of 250 sq. feet for any sized hospital. From that point onwards basic estimate range from 10 square feet per bed in the 100 bed hospital and so on. Teaching hospitals do require a large space.

## QUALITATIVE NORMS FOR FLOOR AREA

The floor of the pharmacy should be resistant, smooth, easily cleanable and acid resistant. The surface should be non-skid, manufacturing sections, drains should be provided. Walls should be smooth, painted in light colour. The cabinets are enamelled or laminated.

## EQUIPMENTS

The Pharmacist is the best judge about the Pharmaceutical equipment needed and their selection for a new hospital or for an existing hospital. A preliminary knowledge of surgical instruments is thus necessary for any pharmacist working

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in a hospital.

The usual equipments are as follows:

A prescription case, Drug stock cabinets with proper shelving and drawers, sectional drawers, cabinets with cupboard bases, work tables and counters for routine dispensing, sink with swivel faucet and drain board, cabinets to store mortars and pestles, cabinets to store glass utensils, flasks, funnels and beakers, refrigerator of suitable capacity, narcotics safe with individually locked drawers, office desk with telephone connection and file cabinet, shelf space, for pharmaceutical library, and dispensing window for nurses and out patients.

The parenterals are prepared in a separate room in large hospitals. They are equipped with a water still , workbench, cabinets, resistant glass storage tanks, burettes, fitted glass filters, conductivity meters, bottle racks, adjustable metal shelves, double sink with drain board, presser sterilizer.

The solution sterilization may be done in the central sterilization and supply section, but the pharmacy may take upon the sterilization in the solution room.

Manufacturing equipments such as ointment mills, mixing machines, collapsible tube filters, powder mixers, granulators, tablet compressing machines and filter press may be considered for installation in the hospital.

## CONCLUSION

Now we understand the hospital pharmacy has an important roll in the hospital. It is managed under the direction of professionally competent legally qualified pharmacist. No one person can possess all the skills and abilities given above. Nor are their opportunities to put everything one knows in to practice. But yes, all pharmacists should have a certain minimum skill in each area and should have an aptitude to develop in one area if circumstances so demand. Herein lies the necessity of broad—based pharmacy education, followed by refresher courses to update the knowledge.

Miss. Thiruveny Kugabalan
JHLC (1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை பிறந்த கதை (வரலாறு)

ஆரம்பத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 1967இல் பாலர் வகுப்பு தொடக்கம் பெற்று, படிப்படியாக உயர்ந்து பாலர் வகுப்பில் இருந்து A/L வரை ஒரே கல்லூரியாக இயங்கி வந்தது. அப்பொழுது திருமதி விமலா ஆறுமுகம் அவர்கள் அதிபராக கடமையாற்றினார்கள்.

பின்னர் 1978ம் ஆண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து பிரிந்து ஒரு ஆண்டு காலம் அதன் கீழ் இயங்கியது. பின் நிர்வாக அடிப்படையில் 1979ஆம் ஆண்டில் பாலர் வகுப்புத் தொடக்கம் 5ஆம் ஆண்டு வரையிலான வுகுப்புக் களைக் கொண்ட பகுதியாக யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை பிரிந்தது.

திருமதி. விசாலாட்சி சிவகுருநாதர் அம்மா அவர்கள், நன்கொடையாகத் தந்துதவிய அரசடி வீதியில் உள்ள விசாலமான நிலப்பரப்பில் அதன் தென்கிழக்கு மூலைப் பகுதியில், கல்லூரி பயன்படுத்தி வந்த 70' x 20' (1400 ச அடி) அளவு கொண்ட கைப்பணி அறை 1979ம் ஆண்டு இப்பாடசாலைக்கு என ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. பின்னர் அதனோடு தொடர்ச்சியாக இருந்த 70' x 20' (1400 ச அடி) அளவு கொண்ட மனையியல் அறை இப்பாடசாலைக்குத் கொடுக்கப்பட்டது. நிலப்பரப்பு விஸ்தீரணம் 8 பரப்பு அல்லது 80 பேர்ச் ஆகும். யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை என்னும் பெயரில் 1979-01-01 தொடக்கம் இயங்கி வருகின்றது.

1979இல் வகுப்பும் மாணவர் தொகை:

| வகுப்பு | வருட ஆரம்பம் பிள்ளைகள் | வருட முடிவு பிள்ளைகள் |
|---|---|---|
| 0 பாலர் வகுப்பு | 41 | 44 |
| i | 57 | 60 |
| ii | 50 | 50 |
| மொத்தம் | 148 | 154 |

154 மாணவருடனும், அதிபரும், 04 ஆசிரியர்களுமாக இப்பாடசாலை இயங்கியது. செல்வி. பத்மாவதி இராமநாதன் அதிபராக இருந்த காலத்திலும், வட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் காலத்திலும் நிகழ்ந்த நிகழ்வுகளாகும்.

இப்பாடசாலை தனித்தியங்கத் தொடங்கிய 1979–01–01 முதல் பல இன்னல்கள், தடைகள், நெருக்கீடுகளுக்கு மத்தியில், எதிர்நீச்சல் போட்டு முன்னேற வேண்டிய, துர்ப்பாக்கிய நிலையிலும், அதிபர் திருமதி. யோகம்மா ஸ்ரீ விக்கினேஸ்வரா அவர்களின் மனஉறுதி, அர்ப்பணிப்பு, விடாமுயற்சியும், அப்போது இருந்த ஆசிர்யர் குழாம், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் நிறைவான ஒத்துழைப்புகள், மற்றும் கல்வித் திணைக்களத்தினரின் பங்களிப்பு போன்றவை இப் பாடசாலை படிப்படியாகப் பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு, பிரபல்யம் அடைந்து வருவதற்கு உறுதுணையாக இருந்தன. யாழ் மாவட்டத்திலேயே சைவச் சூழலில் இயங்கும் இந்துப் பெண்களுக்கான ஆரம்பப் பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது

ஆரம்பப் பாடசாலை படிப்படியாகப் பல துறைகளில் வளர்ச்சி அடைந்து கொண்டு வருகிறது. தற்போதைய அதிபர் திருமதி. த. அ. துரைசிங்கம் இப் பாடசாலையின் பெயரையும், புகழையும் தன்னால் முடிந்தவரை மேன்மையுறச் செய்வதில் முயற்சியுடன் செயற்படுகின்றார். அதற்கு பக்க பலமாக பகவானின் பெருங்கருணையும், நலன் விரும்பிகளினது நிறைவான ஒத்துழைப்பும் கிடைக்கும் போது இப்பாடசாலை மேன் மேலும் வளர்ச்சி பெறும்.

இடம் பெயர்வோடு எமது பாடசாலையின் பெரும்பாலான ஆசிரியர்கள் ஓய்விலும், இடமாற்றம் பெற்றும் சென்றுள்ளார்கள். இப்போது இப்பாடசாலையில் புதிய ஆசிரியர் கட்டமைப்புதான் காணப்படுகிறது.

தற்போதைய ஆண்டுகளின் படி மாணவர் மற்றும் ஆசிரியர் தொகை விபரம் வருமாறு:

| ஆண்டு | 2000 | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|
| மாணவர் தொகை<br>தரம் 1–5 வரை | 410 | 462 | 485 | 525 |
| ஆசிரியர் தொகை | 20 | 21 | 14 | 20 |

இந்த வருடம் இப்பாடசாலை தனது வெள்ளி விழாவை கொண்டாடுகின்றது. இப்பாடசாலை மேலும் மேலும் வளர இறைவனின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்.

மேலும் இப்பாடசாலை தனது வளர்ச்சிக்கு பழைய மாணவர், பழைய மாணவர் சங்கங்கள், நலன் விரும்பிகளின் ஆதரவை வேண்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Some amazing facts

1. In the 1950's a group of playwrights founded a type of drama called the Theater of the Absurd which examined the meaning of life. They included Beckett Lonesco and Pinter.

2. The accordion was invented in Vienna, Austria in 1829 by Cyril Damien.

3. Some species of adder, although they are poisonous are so small that they can only bite humans in very delicate places such as the skin between the toes or fingers.

4. The South Pole was first reached by a Norwegian Ronald Amundsen in 1911. A year before his success he was beaten on his North Pole expedition by the U.S. Polar explorer Peasy.

5. H M S Hermes which was completed in 1913 was the first purpose designed aircraft carrier.

6. The word "alphabet" comes from the first two letters of the Greek Alphabet, 'alpha' and 'beta'.

7. The word 'anaemia' comes from Greek words for 'no' (an) and blood; Anaesthetic - for 'no' and feelings; 'Anarchy' for 'no' and ruler.

8. Wedding anniversaries have different materials connected to them. The first anniversary is 'cotton': the fifth 'wood': and twentieth is China.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. In 1928 Alexander Fleming discovered penicillin. It could kill harmful germs. It was first used extensively in world war II on soldiers having wounds.

10. Armadillo is a small S American mammal covered with a shell of bony plates. But the name is a Spanish word meaning 'a small armoured man.'

11. The word 'assassin' comes from an Arabic word meaning an eater of the drug hasish. Many people under the influence of the drug committed murders.

12. The name Australia comes from a Latin word 'Australis' meaning Southern.

13. Badminton is named after 'Badminton House' in England where the game was first played in the middle of the 19th Century.

14. The word 'ballot' comes from an Italian word meaning little ball. Little balls were dropped into a container to vote - white for yes, black for no. Hence the expression to 'black ball' or vote against somebody.

15. The word "bayonet" is named after the town of Bayonne in France where the weapons were originally made.

Compiled by Mrs. Thilaka Vivekananda Wijeyaratnam
Source: Children's Illustrated Dictionary.

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கனடா
யாழ் இந்து மகளிர் கல்லூரியின் மணிவிழாவினை யொட்டி யாஇமக பமாச கனடா பெருமையுடன் வழங்கிய கலைவிழா, சக்தி 2003, செப்டம்பர் 20, சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சேர் ஜோன் மக்டொனால்ட் கல்லூரி அரங்கம், Scarborough வில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்புக் கிளை – பத்தாம் ஆண்டு (2003) அறிக்கை (08.02.2003 தொடக்கம் 07.02.2004 வரையும்)

சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 2003ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 8ஆம் திகதி கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்தில் இருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு 16 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமான சமாதானம் வேண்டியும் வன்முறையில் இறந்தோருக்கு அஞ்சலியாகவும் 2 நிமிட நேரம் மௌனப் பிரார்த்தனை செய்தோம்.

நடப்பு ஆண்டின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் – திருமதி லீலா நாகரத்தினம்
– திருமதி புஷ்பமணி சுப்பிரமணியம்

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு

தலைவி – செல்வி சற்சொரூபவதி நாதன்

உபதலைவர்கள் – திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்
– திருமதி பொன்மலர் கந்தசாமி
– திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்

பொதுச்செயலாளர் – திருமதி சிவகாமி அம்பலவாணர்

உதவிச்செயலாளர்கள் – திருமதி விமலா மணிவாசகன்
– திருமதி திலகவதி வீரசிங்கம்

பொருளாளர் – திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

உதவிப்பொருளாளர் – செல்வி சிவமலர் சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகக்குழுவினர் – திருமதி ருக்மணி அரசரத்தினம்
செல்வி ஞானலக்ஷ்மி பாலசிங்கம்
திருமதி சிவச்செல்வி சிலலோகநாதன்
திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி நந்தினி மோகன்
திருமதி கமலா கனகசபை
திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன்
திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
திருமதி இராஜகுமாரி கதிர்காமநாதன்
திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம்
திருமதி சத்தியலக்ஷ்மி சிவலிங்கம்
திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்
திருமதி இந்திராணி சோமசுந்தரம்
திருமதி தயாநிதி செல்வநாயகம்
திருமதி கௌரி தேவசேனாதிபதி
திருமதி தற்பராதேவி தில்லைநாதன்
திருமதி சிந்தாமணி வன்னியசேகரம்
திருமதி திலகா விஜயரத்தினம்
திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா
திருமதி வத்சலா நாகலிங்கம்
திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்
திருமதி தயாநிதி உதயகுமார்
திருமதி சர்மிளா விஜயராஜ்
திருமதி சங்கீதா முரளீதரன்

கணக்குப் பரிசோதகர் – கணேசலிங்கம் அன்ட் கொம்பனி, சார்ட்டட் அக்கவுண்டன்ஸ், 16-B, Schofield Place, கொழும்பு 3

இந்த வருடத்தில் பின்வரும் முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன

1. பெண்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தினோம்

2. திருமதி சங்கீதா முரளீதரனின் மாணவிகளின் நடன நிகழ்வையும் செல்வி வேல்விழி சிவசுப்பிரமணியத்தின் இன்னிசை விருந்தையும் ஒப்பேற்றினோம்

3. யாழ் நாதம் இதழ் 9 ஐப் பிரசுரித்தோம்.

4. கல்லூரியின் மணிவிழாவிற்கு எங்கள் சங்கப் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பிரதம அதிதியாகச் சென்றார்.

5 அச்சமயம் அவர் ரூபா 100,000/- கல்லூரிக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

6 கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்குத் தேவையான சில பொருட்களை அனுப்பினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வொன்றை கொழும்பில் மேடையேற்றினோம்.

8. பேராசிரியர் உமாராணி குமாரசுவாமி ரூபா 50,000/- கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார்.

9. திருமதி அபிராமி கயிலாசபிள்ளை ஒரு ஒகன் வாத்தியம் அன்பளிப்புச் செய்தார்.

10. எங்கள் சங்கத் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு தேசிய விருது ஒன்று கிடைத்தது.

11. இந்து சமய அலுவல்கள் அமைச்சிடம் இருந்து ஒரு முச்சக்கர வண்டியைப் பெற்றுக் கல்லூரிக்கு அனுப்பினோம்.

12. திருமதி சிவகாமி அம்பலவாணர் கல்லூரிக்கு ஒரு கணனி அன்பளிப்புச் செய்தார்

13. திருமதி விமலா மணிவாசகன் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு ஒரு கணனி அன்பளிப்புச் செய்தார்.

சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள்

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 08.03.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 10 |
| 27.04.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 12 |
| 24.05.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 13 |
| 21.06.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 10 |
| 19.07.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 11 |
| 16.08.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 12 |
| 30.08.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 10 |
| 27.09.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 13 |
| 25.10.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 11 |
| 20.12.2003 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 06 |
| 17.01.2004 | 24, டீல் பிளேஸ் ஏ, கொழும்பு 3 | 06 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வருடத்துடன் எங்கள் சங்கம் ஸ்தாபித்து 10 ஆண்டுகள் நிறைவு பெறுவதாலும் எங்கள் கல்லூரி ஸ்தாபித்து 60 ஆண்டுகள் நிறைவுபெறுவதாலும் இந்த ஆண்டை விமரிசையாகக் கொண்டாடத் தீர்மானித்தோம்

பெண்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்றை 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணிவரை 3 மணித்தியாலங்கள் நடத்தினோம். இந் நிகழ்வு கொழும்பு 4 லெறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வரும் பெண் வைத்திய நிபுணர்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் சேவையாற்றினார்கள்.

திருமதி நிர்மலா பென்ஜமின்
திருமதி நந்தினி மோகன் சுப்பிரமணியம்
திருமதி சசிகலா சுரேஷ்
திருமதி பாலினி பொன்கோவன்
செல்வி தர்மினி குமாரசுவாமி

இந்த வைத்திய நிபுணர்களில் கடைசியாகக் குறிப்பிட்ட 4 பேரும் எங்கள் கல்லூரிப் பழைய மாணவிகளாவர்.

இந்த நிகழ்வின்போது சத்துள்ள இயற்கை உணவுப் பொருட்களும் மரக்கறி வகைகளும், பழங்களும், சுகாதார நூல்களும் மலிவான விலையில் விற்கப்பட்டன. திருமதி சர்மிலா விஜயராஜ் மகாவலி அதிகாரச் சபை இயக்குனரிடமிருந்து முங்சக்திப் பொதிகளை இலவசமாகப் பெற உதவிபுரிந்தார். செயற்குழு அங்கத்தவர்கள் தங்கள் இல்லங்களில் இருந்து குளிர்பானங்கள் கொண்டுவந்து மருத்துவ முகாமிற்கு வந்தவர்களுக்கு இலவசமாக விநியோகித்தார்கள்.

இந்த நிகழ்வு பற்றி திருமதி சர்மிலா விஜயராஜ் எழுதிய கட்டுரை இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி மணிவிழா சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு எங்கள் சங்க செயற்குழு அங்கத்தவர்களின் படம் ஒன்றை கல்லூரி அதிபர் கேட்டிருந்தபடியால் ஜூன் மாதம் 28ஆம் திகதி ஒரு படம் எடுத்தோம். செல்வி ஓம் சக்தி இரத்தினசபாபதி படம் எடுப்பவரை ஒழுங்கு செய்தார். படம் எடுப்பதற்கு 21 அங்கத்தவர்கள் வந்திருந்தனர்.

திருமதி சங்கீதா முரளீதரனின் மாணவிகளின் நடன நிகழ்வையும் செல்வி வேல்விழி சிவசுப்பிரமணியத்தின் இன்னிசை விருந்தையும் 2003ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றினோம். திருமதி சங்கீதா முரளீதரனும் செல்வி வேல்விழி சிவசுப்பிரமணியமும் எங்கள் கல்லூரிப் பழைய மாணவிகளாவர்.

எங்கள் கல்லூரிப் பழைய மாணவியாகிய திருமதி கௌரியின் அன்புக் கணவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல சட்டத்தரணியுமாகிய திரு வேலாயுதம் தேவசேனாதிபதி பிரதம அதிதியாக வருகை தந்து சிறப்பித்தார். திரு தேவசேனாதிபதி அவர்கள் எங்கள் சங்கத்துடன் ஒன்றிணைந்து உழைப்பவர்.

திருமதி அன்னலஷ்மி இராஜதுரை சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். இவரும் எங்கள் சங்க நிகழ்வுகளை வீரகேசரி பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு உறுதுணையாக இருப்பவர். இவர் இலங்கை பத்திரிகையாளர் சங்கம் 5 சிங்கள தமிழ் சிரேஷ்ட பத்திரிகையாளருக்கு வழங்கிய கௌரவத்தில் ஒரே ஒரு தமிழ் பத்திரிகையாளராக அக் கௌரவத்தைப் பெற்றார். திருமதி அன்னலக்ஷ்மி இராஜதுரையைக் கௌரவிக்கும் முகமாக பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சிறு அன்பளிப்பொன்றை வழங்கினார்.

இந் நிகழ்வின்போது திருமதி சங்கீதா முரளீதரன் கொழும்பு வெள்ளவத்தை புனித சாந்த கிளேயர் கல்லூரியில் நடன ஆசிரியையாகவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நுண் கலைமாமணி இறுதியாண்டு மாணவியாகவும் இருந்தார். நடன நிகழ்வில் பங்கு பற்றிய மாணவிகளின் பெயர்கள் இவ்வறிக்கையின் இறுதியில் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமதி சங்கீதா முரளீதரனின் சிநேகிதி செல்வி பிரேமலதா நாராயணனின் மாணவிகளும் இந் நடன நிகழ்வில் கலந்து கொண்டனர்.

செல்வி வேல்விழி சிவசுப்பிரமணியம் சென்னைக் கலாஷேத்திராவின் M.A. பட்டதாரியாவார். இவரது இன்னிசைக்கு திரு எஸ் திவாகரன் வயலினும் திரு வீ ஜம் புநாதன் மிருதங்கமும் பக்கவாத்தியம் நல்கி மெருகூட்டினர்.

இந்த நிகழ்விற்கு Baseline sound (திரு. ஜஸ்ரின்) ஒலி ஒளி தந்து உதவினார்

வருடாந்த சஞ்சிகையாகிய யாழ்நாதம் இதழ் 9 தை இந்ந நிகழ்வின்போது வெளியிட்டோம். நூல் ஆசிரியை திருமதி சிவகாமி அம்பலவாணர் முதல் பிரதியை பிரதம அதிதி திரு. வேலாயுதம் தேவசேனாதிபதிக்கு வழங்கினார். அதைத் தொடர்ந்து திரு. தேவசேனாதிபதி அவர்கள் சிறப்புப் பிரதிகளை வழங்கினார். உபதலைவி திருமதி பரமேஸ்வரி பாலசிங்கமும் உதவிச் செயலாளர் திருமதி விமலா மணிவாசகனும் பிரதிகளைச் சபையோருக்கு விநியோகம் செய்தனர்.

யாழ்நாதம் இதழ் 9, நூறு பிரதிகள் செய்ததாக திருமதி சிவகாமி அம்பலவாணர் தெரிவித்தார். இதற்கு Risograph இற்கு ரூபா 5,000/- உம் யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கு ரூபா 7,000/- உம் செலவானது.

எங்கள் கல்லூரியின் மணிவிழா 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. மணிவிழாவிற்கு எங்கள் சங்கப் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பிரதம அதிதியாகச் சென்று சிறப்பித்தார். அவருடன் அவரது கணவர் திரு. விசுவநாதர் கயிலாசபிள்ளையும் சென்று கல்லூரிச் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்குத் தேவையான பின்வரும் உபகரணங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hemsons International (Pte) Ltd. Hemas Building, 36, Bristol Street, Colombo 1 இல் இருந்து கொள்வனவு செய்தோம்.

| | | |
|---|---|---|
| HJE/18194 | Hydrometers, Direct Reading Range (0.7000-2.000) | Rs.3780.00 |
| IND/JAM/MAG | Magnifier Pocket Type Metal Frame INDIAN | 378.00 |
| UK/PHL/9426/ | Prism, Equilateral, 60,60,60 Clear INDIAN | 324.00 |
| GER/C/5302 | Compass Plotting Having Case with T | 324.00 |
| IND/QAP/1805 | Dissecting Instruments, 13 Pieces, | 1,080.00 |
| SP142610 | Balance Precision Triple Beam | 14,400.00 |
| | TOTAL | 20,286.00 |

இந்த உபகரணங்களை திருமதி அபிராமி கயிலாசபிள்ளை எங்கள் சங்கத்தின் சார்பில் கல்லூரி அதிபரிடம் கையளித்தார்.

திரு — திருமதி கயிலாசபிள்ளை தம்பதியினர் நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் கோயிலுக்கு சலவைக்கல் (marble) பதிக்கும்படி ரூபா 100,000/- இற்கு ஒரு காசோலையை கல்லூரி அதிபரிடம் கையளித்தனர். மேலதிகமாகச் செலவு வந்தால் தங்களுக்கு அறிவிக்கும்படியும் கூறினர்.

பின்வரும் சங்க அங்கத்தவர்களும் மணிவிழாவிற்குச் சென்றிருந்தனர்
செல்வி சிவமலர் சுப்பிரமணியம்
திருமதி சிவகாமி அம்பலவாணர்
திருமதி விமலா மணிவாசகன்

பழைய மாணவிகள் சங்கம் ஐக்கிய இராச்சியம் கல்லூரிக்கு உதவும் பொருட்டு ரூபா 29,000/- தை ஒரு அன்பர் மூலம் எங்கள் சங்கச் செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணரிடம் அனுப்பி இருந்தார்கள். அவர்கள் விரும்பிய வண்ணம் பின்வரும் பொருட்களை Hemsons International (Pte) Ltd. இல் இருந்தும்
கோவை 1

| | |
|---|---|
| Signal Generator for Students Law | Rs.6,504.00 |
| Photometer Ganongs | 3,078.00 |
| Total | 9,582.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mini Ahuja set ஐ Robert Agencies Ltd., 88, Reclamation Road, Colombo 11 இல் இருந்தும் கொள்வனவு செய்தோம்.

கோவை 2

| | |
|---|---|
| 1 No. A Mix 18 (mm x 50) | Rs.4,435.00 |
| 2 Nos. A Sc 7 (SCM 20 x T) @ 5,207 | 10,414.00 |
| | 14.849.00 |
| Less | 619.00 |
| Total | 14,230.00 |

Ahuja சாமான்கள் கல்லூரிகளுக்கு கொள்வனவு செய்யும்போது சிறு கழிவு கொடுப் பார்கள்.

கோவை 3

| | |
|---|---|
| 2 Nos. Mic 13 (FM) @ 2,050/- | Rs.4,100.00 |
| 1 No. B Plug 28 | 150.00 |
| 2 Nos. Batteries 076 A @ Rs.85 | 170.00 |
| 2 Nos. Batteries 056 (AA) @17/- | 34.00 |
| Total | 4,454.00 |

கோவை 4

| | |
|---|---|
| 1 No. Wire Roll 22 (100 meters) | 847.00 |

| | வரவு | செலவு |
|---|---|---|
| ப.மா.ச. ஐக்கிய இராச்சியம் | Rs.29,000.00 | |
| கோவை 1 | | Rs.9,582.00 |
| கோவை 2 | | 14,230.00 |
| கோவை 3 | | 4,454.00 |
| கோவை 4 | | 847.00 |
| செயலாளர், ப.மா.ச. கொழும்பு | 113.00 | |
| மொத்தம் | 29,113.00 | 29,113.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அன்பளிப்புப் பொருள்களை கலாநிதி வி அம்பலவாணரும் திருமதி சிவகாமி அம்பலவாணரும் மணிவிழாவிற்குச் சென்றபோது ப. மா. ச. ஐக்கிய இராச்சியத்தின் சார்பில் அதிபரிடம் கையளித்தனர்.

இப்பொருட்களை நன்றியுடன் பொறுப்பேற்றுக்கொண்டதாக 22.09.2003 திகதி இடப்பட்ட கடிதத்தில் அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா தனது மகளும் தானும் பாவித்த புத்தகங்கள் சிலவற்றை கல்லூரி நூல் நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்யுமாறு திருமதி சிவகாமி அம்பலவாணரைக் கேட்டிருந்தார். இப் புத்தகங்களையும் கலாநிதி—திருமதி அம் பலவாணர் தம்பதிகள் மணிவிழாவிற்குச் சென்றபோது அதிபரிடம் கையளித்தனர்.

எங்கள் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வொன்றை 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு 4 லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றினோம்.

நடன நிகழ்விற்குத் பின்வரும் அழைப்பிதழ்களை அச்சிட்டோம்

| பெறுமதி | எண்ணிக்கை | மொத்தத் தொகை | ஆசனங்கள் | விநியோகித்த தொகை |
|---|---|---|---|---|
| 5,000 | 30 | 150,000 | 60 | 105,000 |
| 1,000 | 120 | 120,000 | 120 | 75,000 |
| 500 | 120 | 60,000 | 120 | 30,000 |
| 250 | 150 | 37,500 | 150 | 18,500 |
| 100 | 240 | 24,000 | 240 | 24,800 |
| | | 391,500 | 690 | 253,300 |

ரூபா 5,000/- பெறுமதியான தனித்தனி அழைப்பிதழ் காட்களை திருமதி கமலருளேஸ் வரி சர்வானந்தாவும், பத்து அழைப்பிதழ்கள் கொண்ட ஏனைய புத்தகங்களை திருமதி சிவகாமி அம்பலவாணரும் இலவசமாக அச்சிட்டு உதவினார்கள்.

செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணரும் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளையும் பெரும்பான்மை அழைப்பிதழ்களை விநியோகம் செய்தனர். ஏனைய அங்கத்தவர்களும் தங்களால் இயன்றவரை உதவிபுரிந்தனர். ரூபா 5,000/- அன்பளிப்புச் செய்தோர் பெயர்கள் இவ்வறிக்கையின் இறுதியில் இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள் ளது.

யாழ் நகரில் இருந்து அதிபர் ஆசிரியைகள் மாணவிகள் பக்கவாத்தியம் பாதுகாவலர் ஆகியோர் உட்பட 42 பேர் வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு தங்குமிட வசதி உணவு போக்குவரவு ஆகிய சகல அலுவல்களையும் சங்கப் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை முன்னின்று திறமையாக ஒப்பேற்றினார். செயற்குழு உறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினர்களும் யாழ் நகரில் இருந்து வந்தோர் தங்கியிருந்த இடங்களுக்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடினார்கள்.

அத்துடன் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை கல்லூரிக்கு ரூபா 65,000/- பெறுமதியான ஒரு ஓகன் வாத்தியக் கருவியும் அன்பளிப்புச் செய்தார்.

இக் கலை நிகழ்விற்கு மாநகரசபை உறுப்பினர் வைத்தியக் கலாநிதி இராமஜெயம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

எங்கள் கல்லூரிப் பழைய மாணவியும் திறந்த பல்கலைக்கழக உபவேந்தரும் ஆகிய பேராசிரியர் திருமதி உமாராணி குமாரசுவாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அன்றைய தினம் அவர் தனது பெற்றோர் திரு திருமதி கந்தையா நினைவாக வருடந் தோறும் ஒரு ஏழை மாணவியின் கல்விக்கு வட்டிப்பணத்தில் இருந்து உதவும் பொருட்டு ரூபா 50,000/- அன்பளிப்புச் செய்தார்.

எங்கள் கல்லூரி மாணவிகளின் திறமையை சபையோர் எல்லோரும் மிகவும் பாராட் டினார்கள். முக்கியமாக தர்மம் வெல்லும் என்ற நாடகம் மிகவும் அருமையாக அமைந் திருந்தது. தினசரிப் பத்திரிகைகளில் அவ்வப்போது வந்த கட்டுரைகளையும் இவ் விதழில் பிரசுரித்திருக்கின்றோம்.

திரு செல்வத்தம்பி மாணிக்கவாசகர் இக் கலை நிகழ்வு பற்றி பத்திரிகைகளில் விளம் பரம் கொடுத்து உதவினார். இவருக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

எங்கள் சங்கத்தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனுக்கு இலங்கை ஊடகவியலாளர் ஒன்றியம் தேசிய விருது ஒன்றை ஊடகத்துறையில் நீண்டகாலச் சிறப்புச் சேவைக்காக 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி இராமகிருஷ்ண மிஷன் மண்டபத் தில் நடந்த விழாவில் வழங்கி கௌரவித்தனர். அவருக்கு எமது பாராட்டுக்கள்.

இந்துசமய அமைச்சிடம் இருந்து ரூபா 200,000/- இற்கு காசோலையைப் பெற்று ஒரு முச்சக்கர வண்டியைக் கொள்வனவு செய்து அதற்குத் தேவையான ஆவணங் கள் எல்லாவற்றையும் பெற்று முச்சக்கர வண்டியைப் பலமானதாக்கத் தேவையான பாகங்களைப்போட்டுக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தோம். திருமதி அபிராமி கயிலாசபிள் ளை, செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி சிவகாமி அம்பலவாணர் ஆகியோர் இவ் வேலைகளைச் செய்தார்கள்.

அதிபர் 09.01.2004 திகதி இடப்பட்ட கடிதத்தில் இந்த முச்சக்கர வண்டி பெற்றுக் கொண்டமையை நன்றியுடன் தெரியப்படுத்தி இருந்தார்.

அதிபரின் கடிதம் எமது கைக்கு வந்தவுடன் நாம் அதன் பிரதியை இணைத்து இந் து சமய அலுவல்கள் அமைச்சிற்கு நன்றி கூறி ஒரு கடிதம் அனுப்பினோம்.

திருமதி சிவகாமி அம்பலவாணர் ஒரு பென்ரியம் IV கணனியை ரூபா 55,000/- இற் கு PC House இல் கொள்வனவு செய்து கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி விமலா மணிவாசகன் ஒரு பென்ரியம் IV கணனியை ரூபா 55,000/- இற்கு PC House இல் கொள்வனவு செய்து யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார்.

அத்துடன் கல்லூரிக் கணனி அறைக்கு குளிரூட்டி நிறுவுவதில் ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அதிபர் சார்பில் தேவையானவர்களுடன் கதைத்து ஒழுங்கு செய்தோம்.

எங்கள் கல்லூரிப் பழைய ஆசிரியை திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் அவர்களின் கணவர் ஐக்கிய இராச்சியத்தில் சிவபதமடைந்தமையை தேவையானவர்களுக்கு அறிவித்து இது பற்றிய செய்தியை வீரகேசரிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கும் ஆசிரியைக்கு உதவினோம்.

வழமைபோல் யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்குச் சென்றிருந்தபோது யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கும் சென்று அப்பாடசாலை அதிபருடன் பாடசாலையைப் பற்றிக் கலந்துரையாடினோம்.

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ.கீ.பி.பா.ப.மா.சம்) ஒரு அங்கத்துவ பாடசாலையாக இருக்கின்றது. எங்கள் சங்கத்தை இந்த ஆண்டு (2003) பின்வருவோர் பிரதிநிதித்துவப் படுத்தினர்.

செல்வி சற்சொரூபவதி நாதன்
திருமதி சிவகாமி அம்பலவாணர்
திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
திருமதி விமலா மணிவாசகன்
திருமதி பொன்மலர் கந்தசாமி

அத்துடன் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சம்மேளனத்தின் பொருளாளராகவும் திருமதி சிவகாமி அம்பலவாணர் செயற்குழு உறுப்பினராகவும் கடமையாற்றினார்கள்.

2003-12-27 சம்மேளனம் நடத்திய நடன நிகழ்ச்சியின் வெற்றிக்கு எமது சங்கத்தின் சார்பில் உதவி புரிந்தோம்

எங்கள் சங்கக் கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை (Audit) செய்து தந்த திரு சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்த திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்க அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனுக்கும் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன்.

எங்கள் சங்கம் அமைத்த இணையத்தளம் எங்கள் கல்லூரிக்கும், வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவிகளுக்கும், பழைய மாணவிகள் சங்கங்களுக்கும் ஒரு தொடர்பு சாதனமாக உள்ளது.

எங்கள் சங்கம் வளர்ந்து மேன்மேலும் கல்லூரிக்கு உதவிபுரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி சிவகாமி அம்பலவாணர்
கௌரவ செயலாளர்
07.02.2004

இணைப்பு 1

நடன நிகழ்வில் பங்குபற்றிய மாணவிகளின் பெயர்கள் பின்வருமாறு:

தீப நடனம் (செல்வி பிரேமலதா நாராயணனின் மாணவிகள்)

1. லோகனா ரமணீதரன்
2. சுமதி செல்வராஜ்
3. அபிநயா தியாகராஜா
4. லலிதா செல்வராஜ்
5. சுதிஷ்னா சுகித்த
6. அருண் ரமேஷ்
7. அமலன் ரமேஷ்
8. சரண்யா ரமேஷ்
9. சுஷ்மிதா கிருஷ்ணகுமார்

தேயிலைக்கொழுந்து நடனம் (செல்வி பிரேமல்தா நாராயணனின் மாணவிகள்)

1. யூனி பிரியந்தி இரட்னேஸ்வரன்
2. துஷ்க்கா வெற்றிவேல்
3. கார்த்திகா தியாகராஜா
4. ஜனனி சபேசன்
5. கௌதமி கமலநாதன்
6. வைஷ்ணவி இராஜேந்திரா
7. சஞ்சுதா இரவீந்திரகுமாரன்
8. சமித்தா இரவீந்திரகுமாரன்
9. அஜந்தினி சிவஞானசுந்தரம்
10. அனட் அஞ்சனா இராஜகுமார்.

ஜதீஸ்வரம் திருமதி சங்கீதா முரளீதரனின் மாணவிகள்

1. அஷ்வினா நாகராஜா
2. பிரவிணா ஜீவரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தாரணி துரைராஜ்
4. சஷிகா கனகராஜ்

கிராமியப்பாட்டு (தித்திமி திமி) திருமதி சங்கீதா முரளீதரனின் மாணவிகள்

1. யூலி பிரியந்தி இரட்ணேஸ்வரன்
2. அனித்தா நிரோசினி இரவிச்சந்திரன்
3. ஜனனி சபேசன்
4. துஷிக்கா வெற்றிவேல்
5. சஞ்சுதா இரவீந்திர குமாரன்
6. சமித்தா இரவீந்திரகுமாரன்
7. அனட் அஞ்சனா இராஜகுமார்
8. கவிதாமணி இராமச்சந்திரன்
9. அஜந்தினி சிவஞானசுந்தரம்
10. காயத்திரி ஆனந்தராஜா

இணைப்பு 2

நடன நிகழ்விற்கு ரூபா 5,000/- அன்பளிப்புச் செய்தோர் பெயர்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| திருமதி அபிராமி கயிலாசபிள்ளை (ப.மா) | பேராசிரியர் உமாராணி குமாரசுவாமி (ப.மா) |
| செல்வி சிவமலர் சுப்பிரமணியம் (ப.மா) | திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் (ப.மா) |
| திருமதி கௌரி தேவசேனாதிபதி (ப.மா) | திருமதி விமலா மணிவாசகன் (ப.மா) |
| திருமதி அருந்ததி செல்லையா | திருமதி கௌரி ரமணா (ப.மா) |
| திருமதி ஜமுனா கணேசலிங்கம் | திருமதி மணிமொழி பரமேஸ்வரன் (ப.மா) |
| திருமதி தவயோகராசா | திருமதி சிவகாமி அம்பலவாணர் (ப.மா) |
| திருமதி குமாரசிங்கம் | திருமதி ஜெயந்தி வினோதன் |
| திருமதி மாலா சபாரட்ணம் | திரு. சின்னத்துரை இரவீந்திரன் |
| திருமதி லோகேந்திரன் | திரு. இராஜேந்திரகுமார் கணேசராஜா |
| திரு சங்கரப்பிள்ளை அம்மையப்பர் | திரு. என். சரவணபவானந்தன் |
| | திரு. அருளம்பலம் அம்பலவாணர் |

(ப.மா.) – பழைய மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2003ஆம் ஆண்டு செயற்குழு உறுப்பினர்கள்



இடமிருந்து வலம் – இருப்பவர்கள் –

திருமதி திலகா வீரசிங்கம் *(உதவிச் செயலாளர்)*, திருமதி தயாநிதி செல்வநாயகம், திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் *(உப தலைவி)*, திருமதி அபிராமி கயிலாசபிள்ளை *(பொருளாளர்)*, செல்வி சற்சொரூபவதி நாதன் *(தலைவி)*, திருமதி லீலா நாகரத்தினம் *(போஷகர்)*, திருமதி சிவகாமி அம்பலவாணர் *(செயலாளர்)*, திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் *(உப தலைவி)*, திருமதி பொன்மலர் கந்தசாமி *(உப தலைவி)*, செல்வி சிவமலர் சுப்பிரமணியம் (உதவிப் பொருளாளர்).

நிற்பவர்கள் –

திருமதி சத்தியலஷ்மி சிவலிங்கம், செல்வி ஓம்சக்தி இரத்தினசபாபதி, திருமதி சங்கீதா முரளீதரன், திருமதி விமலா மணிவாசகன் *(உதவிச் செயலாளர்)*, திருமதி சர்மிலா விஜயராஜ், திருமதி ருக்மணி அரசரத்தினம், திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன், திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா, செல்வி ஞானலஷ்மி பாலசிங்கம், திருமதி தயாநிதி உதயகுமார், திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் மேடையேற்றிய கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வு



உதவிச் செயலாளர்கள்
'திருமதி விமலா மணிவாசகன் –
திருமதி திலகா வீரசிங்கம்'
விளக்கேற்றி விழாவை
ஆரம்பிக்கின்றனர்.



பிரதம அதிதியாக வருகை தந்த
திரு. திருமதி இராமஜெயம்
அவர்களை சங்க உறுப்பினர்கள்
வரவேற்கின்றார்கள்.



நாடகத்தில் ஒரு தோற்றம்.



புஷ்பாஞ்சலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடன ஆசிரியை திருமதி சாவித்திரி
மதிரூபனின் ஒரு தோற்றம்



சிறப்பு அதிதி பேராசிரியர்
உமாராணி குமாரசுவாமி
உரையாற்றுகின்றார்.

தர்மம் வெல்லும் நாட்டிய நாடகத்தில்
(21ஆம் பக்கம் பார்க்கவும்)



குந்திதேவி கர்ணனிடம் வரம்
கேட்கும் காட்சி.



போரில் கர்ணன் இறந்தபின்
குந்திதேவி கர்ணனை மடியில்
வைத்துப் புலம்புகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம்



நிகழ்வில் பங்குபற்றியோர்

COVER DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org